ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக பங்குனித்திங்கள் 1934ஹு மார்ச்சுமூ—ஏப்ரல்மூ	பரல் அ

திருவாசகம்

வைப்புமா டென்று மாணிக்கத்தொளி யென்று
மனத்திடை யுருகாதே
செப்பு நேர்முலை மடவரலியர் தங்க
டிறத்திடை நைவேனை
ஒப்பி லாதன வுவமனி லிறந்தன
வொண்மலர்த் திருப்பாதத்
தப்ப னுண்டு தன்னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

பதவுரை:—

வைப்பு மாடு என்றும் - ஒருவன் தானிருக்கிற இடத்திலே முன் மறைவாய்ப் பூமிக்குள்ளே புதைத்து வைக்கப்பட்டு நேராய்க் காணப்படாதிருக்கும் புதையற் பொருள்போல, தத்துவங்களாலாகிய எனது உடலிலே எனது கண்ணுக்குக் காணப்படாது மறைந்திருக்கும் பொருள் என்றும்,

மாணிக்கத்து ஒளி என்றும்-மாணிக்கத்தைச் சாணைவைத்துத் தேய்த்தால், அதனிடத்து விளங்கும் ஒளிபோல, எனது உடலின்கண்ணுள்ள உயிர் தற்போதம் கெட்டுத் தூய்மை அடைந்தால் அதனிடத்து விளங்கும் தூவெளி ஒளிப்பொருள் என்றும்,

அப்பன் - எனது தந்தையாகிய சிவபெருமானே (அறிந்து)

மனத்திடை உருகாதே - எனது உள்ளத்தில் (அவன் எனக்கு இடைவிடாது செய்து வருகின்ற காட்டும் உதவியையும் காணும் உதவியையும் நினைந்து) கரைந்து உருகி அவன்மேல் அன்பு மீதூர்ந்து வழிபட்டுத் தவம் செய்யாமல்,

செப்புநேர்முலை மடவரலியர் தங்கள் திறத்திடை நைவேனை - செப்புகளுக்கு ஒப்பான இரண்டு தனங்களையுடைய இளம் பெண்கள் சார்பிற் பெறப்படுவதாகிய சிற்றின்பத்திலே உழன்று வருந்துகிறவனாகிய என்னை,

ஒப்பிலாதன - வேறு எந்தப் பொருளுக்கும் ஒப்புச் சொல்லக் கூடாதனவாயும்,

உவமனில் இறந்தன - வேறு எந்தப் பொருளுடனும் உவமித்துக் கூறுதல் முடியாதனவாயும் உள்ள,

ஒண் மலர்த் திருப்பாதத்து ஆண்டு - பேரொளியாய் அடியார்களுடைய இருதய தாமரைமலரில் விளங்கும் அருள் வடிவாகிய இரண்டு திருவடிகளையும் எனது தலைமேல் வைத்துத் தீக்கை செய்து என்னைத் தனக்கு அடிமையாகக் கொண்டு ஆண்டருளி,

தன்னடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாம் - தனது அடியார் கூட்டத்துடன் சேர்த்தருளிய புதுமையைக் கண்டோம்.

விளக்கவுரை:—

வைப்புமாடென்றும் மாணிக்கத் தொளி யென்றும் - மாடு - செல்வப் பொருள். வைப்புமாடு—பூமிக்குள் ஒருவனுக்குத் தெரியாது அவனிருக்கிற இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கிற புதையற் பொருள். அப் புதையற் பொருளை யறியாமல் பொருள் தேடுவான் புறத்தின்கண் அலைந்து திரிந்துங் கிடையாமல் வறுமை காரணமாகப் பசிநோயால் வருந்துதல் போல, அடிகள் தமது உடலின்கண் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அவைகளில் மறைவாயிருக்கும் சிவபெருமானை அறிந்து அவனை நுகராது புறத்தின்கண்ணுள்ள சிற்றின்பம் தேடி உழன்றதாகக் கூறுவார்; "வைப்புமாடு என்று மனத்திடை உருகாதே" என்றார். வைப்புமாடு என்றதனால், சிவபெருமான் தத்துவங்களுக்கு ஆதாரமாய் விளங்குதற்கும் அவைகள் இயங்குதற்கும் இன்றியமையாத பொருளாய் உள்ளவன் என்று கூறப்பட்டது. மாணிக்கத்து ஒளியாய் என்றதனால், சிவபெருமான் அத் தத்துவங்களைக் கடந்து நின்று அத்தத்துவங்களை உடலாகக் கொண்டு விளங்குகிற உயிருக்குஉயிராய், அவ்வுயிர் வேட்கை அறிவு, செயல்கள் விளங்கப் பெறுதற்கு இன்றியமையாத பொருளாய் உள்ளவன் என்பது

பெறப்பட்டது. அறிவில் பொருளாகிய தத்துவத்தை வைப்புமாடு என்றும் அறிவுள்ள உயிர்ப்பொருளை மாணிக்கத்தொளி என்றும் அடிகள் உவமித்தார். சிவபெருமான் தன்னை ஆன்மா அறிதற்கு ஆன்மாவினது உடலின்கண் மறைவாயிருக்கும் பொருள் என்பது "வைச்சபொருள் நமக்கு ஆகும் என்றெண்ணி நமச்சிவாய அச்சமொழிந்தேன்" என்று திருநாவுக்கரசு அடிகள் தாம் பாடிய கோயிற் றிருவிருத்தம் நான்காவது பாட்டிலும், "எவ்வுயிர்க்கும் வைப்பினை" என்று சுந்தரமூர்த்தி அடிகள் தாம் பாடிய திருவாரூர்ப் பதிகம் ஏழாவது பாட்டிலும் கூறி அருளினமை காண்க.

மனத்திடை யுருகாதே—சிறிய அண்டமாகிய உடலுக்குக் காரணமாயிருக்கிற தத்துவங்களை ஆசனமாகக் கொண்டு அவைகளுக்கு ஆதாரமாய் அவைகளில் நிறைந்து விளங்கியும் அவற்றைக் கடந்தும் நிற்கிற சிவபெருமானது பொதுஇயலை அடிகள் தாம் முதற்கண் தத்துவங்களில் வைத்துக் கருவி அறிவினல் ஆராய்ந்து அறிந்தும், பின் அருளறிவாய் அத்தத்துவங்களில் விளங்கும் ஒளியை அறிந்து தத்துவ வாதனையை மாற்றிச் சிவபெருமானது சிறப்பியலை அறிந்தும், தமது மனதில் உருகவில்லை என்பதை "வைப்புமாடு" என்றும் "மனத்திடை உருகாதே" என்றும், ஆன்மாவின்கண் அறிவுக்கு அறிவாயும் ஆன்ம அறிவைக்கடந்தும் விளங்கும் சிவபெருமானது பொது இயலை அடிகள் தாம் முதற்கண் தமது அறிவில் கருவியறிவால் துவிதமாய் அறிந்தும், பின் தமது ஆன்மஅறிவு சிவபெருமானுடைய நிறையறிவில் அடங்கி ஆன்மபோத மிழந்து சிவபெருமானது சிறப்பியலை அருளறிவால் அவனுடன் அத்துவிதமாய்க் கலந்து பேரின்பம் உணர்ந்து தமது மனதில் உருகவில்லை என்பார், 'மாணிக்கத்தொளி" என்றும் "மனத்திடையுருகாதே" என்றும் கூறினர். திருவடிதீக்கை செய்யப் பெற்றபின் நன்குணர்ந்த இந்த அனுபவங்களை அடிகள் இங்கே கூறினர்.

மனத்திடையுருகாது—

"உள்ள முருகி லுடனுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

என்று, திருவுந்தியார் ஏழாவது பாட்டுக் கூறுகிறபடி ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலத்தற்கு அன்பினல் உருகுதல் இன்றியமையாது வேண்டப்படுவது என்பது கூறப்பட்டது.

ஏ, அசை

ஒப்பிலாதன உவமனில் இறந்தன—

"ஒப்புடைய னல்லன் ஓர் உவமனில்லி"

என்று திருநாவுக்கரசு அடிகள் வினாவிடைத் திருத்தாண்டகம் பத்தாவது பாட்டில் கூறியருளினர்.

ஒப்பிலாதன உவமனிலிறந்தன-இரண்டும் பலவின்பாற் படர்க்கைப்பலவின் பால் வினையாலணையும் பெயர்கள். ஒப்பிலாதனவும் உவமனிலிறந்தனவும் ஆகிய பாதம் என இரண்டுபாதங்களையும் குறிக்கும் அடைமொழிகளாய் வந்தன.

ஒண்மலர்த் திருப்பாதத்து—திருப்பாதம்+அத்து திருப்பாதத்து. அத்து சாரியை.

திருப்பாதம் என்பது அருளாகிய பாதம்; மலர்த்திருப்பாதம்என்பது அடியார்களுடைய இருதய தாமரை மலரில் விளங்கும்பாதம். ஒண்மை என்ற அடைமொழி பாதத்தைத் தழுவுகின்றது. ஒண்பாதம் என்பது பேரொளியோடு விளங்கும் பாதம் ஆகும். பாதம் என்பது இங்கே இரண்டு திருவடிகளையும் குறிக்கின்றது.

பாதத்து ஆண்டு—பாதங்களால் ஆளுதல் என்பது மானுடவடிவில் குருவாய் வந்த சிவபெருமான், அடிகள் தலைமேல் தமது இரண்டு திருவடிகளை வைத்துத் திருவடி தீக்கை செய்து மும்மலங்களையும் நீக்கித் தனது அருட்சக்தியை முற்றிலும் பதியவைத்தல் ஆகும். அடிகள் இவ்வாறு திருவடி தீக்கை செய்யப்பெற்றபின் முன் சிவபெருமானது அருளை அடைந்த அடியார் கூட்டத்துடன் சேர்க்கப்படுதலால் "அடியரிற் கூட்டிய" என்றார். திருவடி தீக்கை செய்யப் பெற்றபின் அடிகள் அடைந்த பேரின்ப உணர்வு முன் இல்லாதிருந்து இப்பொழுது உணரப்படுதலால் அதனை முன்னில்லாதிருந்த (புதுமை) 'அதிசயம்" என்றார்.

கண்டாமே—ஏ, அசை. அடிகள் திருவடி தீக்கை செய்யப்பெற்று அடியார் கூட்டத்துடன் சேர்க்கப்பட்டபொழுது அவர்களோடும் அத்துவிதமாய்க் கலந்தும் அதிசயத்தை உணர்தலால் கண்டாம் என்றும் பன்மையிலே கூறினர்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை

சமயமும் தத்துவமும்:
Religion & Philosophy

சைவர் மகாநாடு

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையுரை

(முன் ௩௩௪-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கோயில் நுழைவு.

இனி, இதனைப்பற்றி இங்கே பேசும்போது பெருங் கிளர்ச்சியுடன் நடைபெற்று வருகின்ற இக்கால நிகழ்ச்சி யொன்று யாவருடைய நினைவிற்கும் வாராமற் போகாது. அதுகுறித்து ஒன்றுங் கூறாதுவிடின் அது படிறு, அல்லது கோழைமையின்பாற்படும். எக்குடியிற் பிறந்தார்க்கும் அவரது சமயக் கோயிலிற் சென்று ஆண்டவனை வழிபட உரிமை வேண்டு மென்பாரும், சிலர்க்கு அது கூடாதென்பாரும் சமயப் பற்றுடையவர்களே, சமயம் மாசின்றி நிலைபெற வேண்டுமென்னும் எண்ணம் உடையவர்களே. ஆகலின் ஒருவர் கருத்தை மற்றொருவர் பரிவுடன் ஆராய்ந்து பார்த்தல் முறையாகும். நான் இங்கே கூறக் கருதுவன நூன்முறையுடன் மாறுபடாத சில வரலாற்றுண்மைகளே. அவற்றை ஆய்ந்து துணிதல் இப்பேரவையோர் கடனும் ஏனை அறிஞர் கடனுமாம்.

திருக்கோயில்கள் இப்பொழுது காணப்படுதல் போன்றே பண்டை நாளில் இருந்தன வல்ல, முன்னாளில் மரங்களினடியிலும், மன்றங்களினும் நட்ட கந்துருவங்களில் கடவுளை வழிபட்டு வந்தனர். பின்பு, நாளடைவில் மண்டபங்களும், திருச் சுற்றுக்களும் பிறவும் சிறிது சிறிதாகப் பெருகி வர அவற்றை அமைக்கும் ஆகம விதிகளும் ஏற்படலாயின. இப்பொழுதும் ஓர் மரத்தடியில் வைக்கப்பெற்ற பிள்ளையாருக்குச் சிறு பந்தரும், மண்டபமும், கோயிலும் முறை முறையே உண்டாதலைக் காண்கின்றோம். இவ்வாறே தான் பண்டை நாளிலும் கோயில்கள் யாவும் தோன்றின. யானை முதல் எறும்பு ஈறாக வுள்ள அனைத்துயிர்களும் கடவுளைவழிபட்ட செய்தியைப் புராணங்கள் புகல்கின்றனவே. இப்பொழுதுள்ளன போன்ற கோயில்களிலா அவை வழிபட்டன? கோயில்

கள் பண்டைநாளில் எப்படியிருந்தன வேனும் இப்பொழுதுள்ள வழக்கத்திற்கு மாறாக யாதுஞ் செய்தல் பொருந்தா தெனின், வழக்கம் என்பதும் யாண்டும் ஒரு பெற்றியாகக் காணப்பட வில்லையே. தமிழகத்திலேயே ஒரு நாட்டுக் கோயிலிற் புகுதற் குரியரல்லார் மற்றொரு நாட்டுக் கோயிலிற் புகுதற் குரியராதலும் தமிழ் நாட்டின் எப் பகுதியிலும் கோயிலிற் புகலாகாதவர் வேறு நாட்டுக் கோயிலிற் புகுதற் குரியராதலும் காணப்படுதலின் நூல் களோ வழக்கமோ இன்னின்னார் கோயிலிற் புகத்தகாதவர் என அறுதியிடுவதாகத் தோன்றவில்லை. சில வகுப்பினர் யாண்டும் கோயிலிற் புகுவதில்லை யெனினும், ஒருசார் நூல்களும் அதற் காதரவாக விருப்பினும் நம் பெருமக்களுடைய உண்மைக் கருத் தினை ஊன்றி யுணர்தலும், நமது சமயத்தின் ஆக்கத்தை நாடுதலும் நமக்குரிய கடனும். சாதி குலம் என்பன உலகியல் நடை பேற்று முறையில் ஏற்பட்ட சில கட்டுப்பாடுகள் அல்லது சட்டதிட்டங் கள். சமயங்களோ உயிர்களின் கடைத் தேற்றத்திற் குரிய நெறி கள். உடல் பற்றுக் கோடாகத் தோன்றிய சாதி உயிரின் ஈடேற் றத்தைக் குறிக்கோளாகவுடைய சமயத்திற் புகுந்து சில மக்களை அதற்குரிய ரல்லா ராக்குதல் முறை யாகுமா? நம் சைவ சமய அருட் குரவர்கள் கோயில்தோறுஞ் சென்று இறைவனை வணங்கி உய்யுமாறு பதிகங்க டோறும் வற்புறுத்தருளியது சிலரை மட்டுங் கருதியோ? சிவ நேயர்காள்! இவற்றை ஓர்ந்து பாருங்கள். வட மொழிக் கடலும், தென்மொழிக் கடலும் நிலை கண்டவரும், வேத ஆகமங்களின் விளை பொருளெல்லா முணர்ந்து சிவஞான போதத் திற்குத் திராவிட மாபாடியம் என்னும் ஒப்பற்ற பேருரை வகுத்த வருமாகிய மாதவச் சிவஞான முனிவர்,

> "சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடின்
> அவனுடன் உறைக,
> அவனொடு கலந்து பேசுக, அவனொ(டு)
> அருகிருந் துண்ணுக வென்னும்
> உவமையில் சுருதிப்பொருடனை நம்பா
> ஊமரோ டுடன்பயில் கொடியோன்
> இவனெனக் கழித்தால் ஐயனே
> கதிவே றெனக்கில்லை கலைசையாண் டகையே"

என்றருளிய அருமைச் செய்யுளின் பொருளைச் சிந்தனை செய்யுங் கள். அருமறையின் துணிபு இதுவென்றும் அதனை நம்பாதவர்

இத்தகைய ரென்றும், அவ் வன்கண்ணரொடு உடன்பயிலுதலே இறைவனுக்கும் வெறுப்பினை விளைக்கும் பெருந் தீங்காமென்றும் அருளிச் செய்ததனை அறிந்து வைத்தும், அதனைப் புறக்கணித் தொதுக்கி மாறுபடப் பேசுவோரும் சைவ ராவரோ? அன்னார் அவரைப் போற்றுதலும் உண்மையாமோ? மற்றும் சமயத்தின் நிலைபேற்றை விரும்புவோர் புறச் சமயம் புகுவோர் புகுக, சைவ சித்தாந்தத் தேனமுதருந்துவோர் சில ரிருந்தாற்போதும் என அமைதல் சாலாது. பலர் இருப்பினன்றி இக்கால நிலையில் அத்தே னமுதைச் சிலரும் அருந்த முடியாதநிலை எற்படும் என்பதுஉறுதி. காலமென்னும் கடு நீர்ப் பெருக்கானது சமய நெறியுள்ளும் முன் னும் எத்தனையோ பல மாற்றங்கள் செய்துள்ளது; இனியும் செய்ய வல்லது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தலைசாய்த் துக் கொடுப்பதே அழிவினைத் தடுக்கும் சதுரப்பாடாகும்.

சமாஜப் பணி

இனி, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பணிகள் சிலவற் றைக் குறிப்பிட விரும்புகின்றேன். சமாஜம் இதுவரை சமயத்திற் குப் பல தொண்டுகள் புரிந்துள்ளது என்பதில் ஐயமில்லை. அதி லும் சில ஆண்டுகளாகச் சைவத் திருமுறைகள் யாவற்றையும் யாவரும் எளிய விலைக்குப் படிக்குமாறு அழகுற அச்சிட்டு வருஞ் செயல் மிகவும் பாராட்டற் குரியது. இந் நன்முயற்சியில் ஈடுபட் டுழைக்கும் சமாஜ உறுப்பினர்கட்குச் சைவ உலகம் முழுதும் கடப்பா டுடையதாகும். இங்ஙனமே மெய்கண்ட நூல்களையும், பிற சைவ நூல்களையும் அச்சிட்டு உதவும் பணியைச் சமாஜம் மேற் கொள்ளுமென்னுந் துணிபுடையேன்.

சமய வளர்ச்சியின் பொருட்டுச் சமாஜம் மேற் கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் எத்தனையோ பல உள்ளன. சைவ சமயத்தவருள் தங்கள் சமய உண்மைகளை அறிந்தவர்கள் எத்தனை பேர் உளர்? தங்கள் சமய நூல்கள் இன்னவென்றும், சமய குர வர் இன்னரென்றும் அறிந்தவர்களாவது 100-க்கு ஐந்துபேர் இருப்பரோ? இந்த நிலைமையில் இன்னும் எவ்வளவு காலத்திற்குச் சைவ மக்களை விட்டு வைப்பது? சைவரென்போர் யாவரும் தம் சமய உண்மைகளை ஓரளவேனும் தெரிந்து கொள்ளவேண்டிச் சமாஜம் உடனே மேற்கொள்ள வேண்டிய பணியாவது தகுதி

யுடைய சமயச் சொற்பொழிவாளர் ஒருவரேனும் ஊர்தோறுஞ் சென்று விரிவுரை யாற்றும்படி ஏற்பாடு செய்தலாகும். மற்றும் தமிழ் நாட்டின் இன்றியமையாத இடங்களிலேனும் ஆண்டுதோறும் சிலராவது சைவ சித்தாந்த நூல்களை முறையாகக் கேட்டுப் படிக்கும்படி தூண்டுதல் வேண்டும். சித்தாந்த வெளியீட்டிலும் சைவ சமய உண்மைகளை அனைவரும் எளிதில் உணரும்படியாகத் தனித்தனியே விளக்கி எழுதிவரல் வேண்டும். மிக எண்மையுடைய இரண்டொரு பணியையே இங்கே குறிப்பிட்டேன். ஆனால் என் விருப்பம் உலக முழுதும் சைவ சமய மாண்பினை அறியும்படி செய்து 'சேரவாரும் ஜெகத்தீரே' என அழைக்க வேண்டுமென்பதாகும். சமாஜம் தன் பணியைச் செய்யுமாறு சைவர்கள் யாவரும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தும் பிறவாறும் உதவி புரியும் கடமைப்பா டுடைய ராவர். முடிவாகச் சைவ மக்கள் எல்லாருடைய நினைவுக்கும் நான் கொண்டுவர விரும்புகின்றவை சைவர்க ளெல்லோரும் தாழ்வெனும் தன்மையுடையராதல் வேண்டும்;

'நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை
என்றுஞ் சிவன்றா ளிணை'

என்றபடி எப்பொழுதும் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்தல் வேண்டும்; தீமை யெல்லாவற்றையும் போக்கி நன்மை யனைத்தையும் தரவல்ல திருவைந் தெழுத்தை இடையறாது, உருப்பெற உன்னி ஓதுதல் வேண்டும்; சைவத்திற்கும் நமக்கும் வாழ்வளித்த சமய குரவர்களை மாறா அன்புடன் போற்றி ஒழுகுதல் வேண்டும்; இவற்றால் தாம் எய்தும் இன்பத்தை வையக முழுதும் எய்துக வெனச் சிந்தித்தல் வேண்டும் என்பனவே.

நமச்சிவாய வாழ்க ! நாதன் றாள் வாழ்க !!

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழகம்

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.,]

(முன் ௩௪௯-ம் பக்கத் தொடர்ச்சி)

தொல்காப்பியருக்குமுன் தமிழ் இலக்கியம்

29. தலைச்சங்ககாலம் தனித்தமிழ்க்காலம். முதற் கடற் கோளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட முதல் இலக்கணம் தொல் காப்பியம். "என்ப" "என்மனார் புலவர்" எனத் தொல்காப்பியச் சூத்திரங்களிற் காணப்படும் தொடர்களும், ஆங்காங்கே மேற் கோளாகக் காட்டப்படும் செய்யுள்களும், இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்னும் ஞாயமும், தொல்காப்பிய காலத் துக்குமுன் தமிழ் இலக்கியங்கள் பரந்து கிடந்தன என வலியுறுத்து கின்றன. தொல்காப்பியத்தினின்றும் அறியக் கிடக்கும் நாகரிகம் தமிழரின் தொன்மையையும், சிறப்பையும் வலியுறுத்தும் சான்று ஆகும்.

தொல்காப்பியர் காலம்

30. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பகன்ற பனம்பாரனார் தொல்காப்பியருடன் கற்றவர். இன்னார் தமிழ்நாட் டெல்லையை,

> "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத்
> தமிழ் கூறு நல்லுலகத்து"

என வடக்கே திருப்பதியையும் தெற்கே குமரியாற்றையும் குறித் திருக்கிறார். இவர் குமரியாற்றை எல்லையாகக் கூறுவதால் குமரிக் குத் தெற்கேயுள்ள நாடுகள் கடல்கோள்பட்டதென நிச்சயிக்கப்படு கிறது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் "இவ்வாசிரியர் ஆதியூழி யின் அந்தத்தே இந்நூல் செய்தலின்" என உரைத்திருப்பதை ஆராயுங்கால் இது முதற்கடற்கோளுக்குப் பிற்பட்டதென்னலாம். தொல்காப்பியத்தில் ஆரிய மொழிகள் கலந்திருப்பதனால் இஃது ஆரியக் கலப்பின் பின்னர் செய்யப்பட்டது எனவும் நிச்சயம் செய்யலாம். எல்லாவாற்றானும் இவர் முதற் கடற்கோளுக்குப்

பிற்பட்டவரென்றும், இவர் காலத்தே புதுநிலப் பரப்புத் தோன்றி வட நாட்டு ஆரியர் தமிழ்நாட்டாருடன் கலந்து வாழ்ந்தன ரென வும், இவர் காலத்தில் தமிழ்நாட்டெல்லை இருமருங்கிலும் குறைந்து வட வேங்கடம் தென்குமரி யாயிற்றென்பதும் பெறப்படுகிறது. இவரது காலம் இடைச்சங்க காலமென்பது பலரின் கருத்தாதலா லும் இவர் இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உள்ளவர் எனலாம்.

தமிழர் ஆரியர் கலப்பு

31. இமயம்வரை பரவியிருந்த தமிழருடன் ஆரியர் கலந்து கலப்பு மக்களாய் மாறினர். இராமாயண காலத்திற்குமுன் விந்திய மலைக்கு வடக்கேயுள்ள நாடு ஆரியர் வசமாயிற்று. இராமாயண காலத்திற்றான் முதன்முதல் ஆரியர் விந்திய மலைக்குத் தெற்கே புகுந்தனர் என்பதும், இலங்கை மன்னன் தண்டகாரண்யம் என் னும் விந்தியமலைக்குத் தென்பாகத்திலுள்ள நாட்டிற்கு உரியவ னென்பதும் சிவநேசம் பூண்டவனென்பதும் ஆராய்ந்து அறியக் கிடக்கின்றன.

32. இதற்குப்பின் இரண்டாங் கடற்கோள் நிகழ்ந்து குமரியா றும், கபாடபுரமும் கடல்வாய்ப்பட, தமிழகம் குறுகி

> "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
> தமிழ் வரம்பறுத்த தண்புன னாட்டு" —சிலப்பதிகாரம்.

என்றபடி குமரிமுனையைத் தென் எல்லையாயுடைய தாயிற்று.

தமிழகத்தின் வடபாகம் தெலுங்கு நாடானமை

33. இராமாயணப் போரில் வெற்றி பெற்றதின் காரணமாய் விந்தியமலையுடன் குறுகிய தமிழ்நாட்டின் வடபகுதியில் வட மொழி பரவுவதாயிற்று. இப்பாகத்திலுள்ள தமிழ்மக்கள் வட மொழியைத் தமிழுடன் கலந்து வடுகு என்னும் ஒரு புதுமொழி பேச ஆரம்பித்தனர். இஃது இரண்டாஞ் சங்கம் அழிந்தபின்னர் தோன்றிய சிறுகாக்கைபாடினியாரின் செய்யுளால் பெறப்படும்.

> "வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
> தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
> வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
> நாட்டியல் வழக்காம்........ (தொல். பாயிரவிருத்தி)

கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலவரை

34. கடைச்சங்கத்தின் இறுதி கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முன் எனக் கருதப்படுகிறது. இக்கடைச்சங்க காலத்தில் கரிகால் பெருவளத்தான் போன்ற தமிழ்மன்னர் இமயம்வரை படை கொண்டு சென்று வெற்றிபெற்று வாகைசூடித் திரும்பினர். இக்காலத்தில் தமிழர், யவனர் முதலிய மேற்றிசையாளருடன் வாணிபஞ்செய்து பெருஞ் சீரும் சிறப்பும் பெற்று உயர்ந்த நாகரிகம் படைத்திருந்தமை சந்திரகுப்த மௌரியரின் அவைக்குக் கிரேக்கநாட்டுத்தூதராய் வந்த மெகஸ்தனீஸ் என்பார் எழுதியுள்ள குறிப்புகளாலும் பிற இலக்கிய அகச்சான்றுகளாலும் தெளிவுறுகிறது.

35. கி. பி. மூன்றாம் நூற்றாண்டி னிறுதிக்காலத்திலிருந்து கி. பி. நான்காம் நூற்றாண்*டின் நடுப்பகுதிவரை மாணிக்கவாசகர் காலமாம். பின்னர் ஆறாம் நூற்றாண்டுவரை சமணர் காலமாம். அதன்பின்னர் சைவம் தழைத்து ஓங்கினதெனினும், ஏழாம் நூற்றாண்டில் சமணம் மதுரையில் நிலவியது. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகள் தேவாரகாலமாகும். இக்காலத்தில் சமணமும், பௌத்தமும் நீங்கிச் சைவம் பெருகிற்று. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் ஒன்பதாம் நூற்றாண்டும் வைணவ ஆழ்வார்கள் காலம். 10-ம் நூற்றாண்டில் சமணர் கிளர்ச்சி பெருகிச் சைனப் பெருங்காப்பியங்கள் தோன்றின.

தமிழகத்தின் மேல்பாகம் மலையாள நாடானமை

36. ஏறக்குறைய 9-ம் நூற்றாண்டினிறுதியிலும் 10-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சேர நாட்டில் மலையாளந் தோன்றி காலப்போக்கில் தமிழகத்தின் மேற்கெல்லை குறுகி

> "குணகடல், குமரி, குடகம் வேங்கடம்
> எனு நான் கெல்லையினிருந்த மிழ்க்கடலுள்" —நன்னூல்

எனவ்ாயிற்று.

சோழர் எழுச்சி

37. 10, 11, 12-ம் நூற்றாண்டில் சோழமன்னர்கள் வடக்கே கங்கைவரையும், கிழக்கே கடல்கடந்து இலங்கை, பர்மா வரையும்

---

* உயர்திருவாளர்கள் மறைமலையடிகள், கா. சுப்பிரமணியம்பிள்ளை சி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் அடிகள் காலத்தைத் தக்க சான்றுகளுடன் மூன்றாம் நூற்றாண்டென நிலைநாட்டியுள்ளார்கள்.

வென்று தங்கள் பெருமையை நிலைநாட்டினரேனும் தமிழகம் விரிந்திலது. 13 முதல் 16-ம் நூற்றாண்டுவரை மணிப்பிரவாள உரைநடைக் காலம். இக்காலத்தில் விஜயநகர ஆட்சி அரவீடு (Aravidu dynasty) மன்னர்கள் வசமானதும், சந்திரசேகர பாண்டியன் இறுதியுறவும், பாண்டியன் மதுரை தெலுங்கர் வசப்பட்டு, தமிழ்மன்னர் இலராயினர். †எனினும் தொண்டைநாடும், சோழநாடும், பாண்டியநாடும் தமிழர்களின் தாய்நாடாய்த் திகழ்கின்றன.

ஆங்கில ஆட்சியில் தமிழகம்

38. விஜயநகரம் அழிவுற்றதும், ஆங்கிலேயர்கள் அரசுபெற தமிழகமும் 10 ஜில்லாக்களுக்குள் ஒடுங்கிற்று. தமிழ் மக்களின் தாய்நாடு இதுவேயாயினும், தமிழர்கள், வெளியே இலங்கை மோரீஸ், பர்மா, பினங்கு, தென் ஆப்பிரிக்கா, கீழ் ஆப்பிரிக்கா முதலிய பல இடங்களிலும் சென்று குடியேறி வசித்துவருகின்றனர். ஏறக்குறைய $2\frac{1}{2}$ கோடிமக்கள் இதுகாலை தமிழராவார். (தொடரும்.)

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ, திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் ௩௨௩-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் வடமொழி ஒலிக்கேற்ற எழுத்துக்களை நம்மொழியில் புகுத்தபொழுது க்ஷ என்னும் மிகைபட்ட எழுத்தைக் கூட்டினர். இவ்வெழுத்து "ட்ச" என்னும் எழுத்துக்களின் கூட்டொலிக் கொத்ததே. எனவே இச் "க்ஷ" மிகைபட்டதே.

இக்காலத்தில் நம் மொழியைச் சீர் செய்யப் புகும் நாமும் அவ்வாறு மிகைப்பட எழுத்துக்களைக் கூட்டின் வடமொழிக் கெடுத்துரைத்த இழிவே நம்மொழிக்கு மேற்படும். ஆகையால் இவ்வழியைத் தவிர்த்து வேறுவழி நாடுவோம்.

ஆங்கிலத்தில் A என்னும் எழுத்திற்கு 12 வேற்றொலிகளுண்டு. எனினும் அவ்வோரெழுத்தையே ஆதாரமாகக்கொண்டு

---

†பிற்காலத்து அரசுபெற்ற மாட்சிமை தங்கிய புதுக்கோட்டை அரசர் தமிழ் மன்னராம்.

அவ்வெழுத்தின் தலையில் —, U, Λ, . , —, ,, இவைபோன்ற குறிகளையிட்டு அவ் வேற்றொலிகளைக் காண்பிக்கிறார்கள்.

நம் முன்னோரும் குற்றுகர இகரங்களைப் புள்ளியுடன் எழுதினார்களென முன் உரைத்தேன்.

1917-ம் ஆண்டின் இறுதியிலோ 1918-ம் ஆண்டின் முதலிலோ திரு P.V. மாணிக்க நாயக்கர் அவர்கள் திருச்சி நகர மண்டபத்தில் "தமிழ்மொழியினோசை" யென ஒரு சொற்பொழிவு நடத்தினர். அச்சொற்பொழிவு கேட்கும் பாக்கியம் எனக்கும் வாய்த்தது. இவர் அச் சொற்பொழிவில் ஆயுத எழுத்தை இகர மெய்களுடன் சேர்த்தொலிப்பின் மற்ற மொழிகளிலுள்ள எல்லா ஓசைகளையும் ஒலிக்கலா மென எடுத்துக் காட்டியது மன்றி 18 பிறமொழிகளை அவ்வாறே தமிழில் எழுதியும் காட்டினர்.

ஆகையால் நாமும் இப்புத்தோசைகளைக் குறிக்கப் பழைய எழுத்துக்களுடன் ஒரு குறியை இணைத்துக் காட்டுவதே நன்றெனத் தோன்றுகிறது. அக்குறியும் சுலபத்தில் எழுதவும், அச்சிடக் கூடியதாகவு மிருக்கவேண்டும். எல்லாப் புத்தோசைகளுக்கும் ஒரு குறியையே இணைக்கவேண்டும்.

இது ஏற்குமாயின் கீழே காட்டுவதுபோல் இப்புத்தோசைகளைக் குறிக்கப் பழையஎழுத்துக்களுக் கடுத்தாப்போல் முற்றுப் புள்ளி (Fullstop) என்ற குறியைத் திருப்பிவைத்து அவ்வெழுத்துக்களுக்கு அயலில் வர இணைப்பதே சான்றெனத் துணிந்தேன்

பழைய எழுத்து.	புள்ளி யொடியங்கல்.	புத்தொலி.
க	க·	Ga.
ச	ச·	Za.
த	த·	Dha.
ட	ட·	Da.
ப	ப·	Ba.
வ	வ·	Fa.
ழ	ழ·	Z. as in azure

மேலே காட்டிய குறியானது, நம் முன்னோர்கள் வேற்றோசைகளுக்குத் தழுவியதும், மாணிக்க நாயக்கர் காட்டியது போல் ஃ என்னும் ஆயுதத்தின் ஒரு பாகமாயும், அச்சிடுவதற்குப் புதிய அச்சுகள் வேண்டாமையினாலும், தற்பொழுதில் வழக்கத்திலிருக்கும் ஓர் அச்சே எல்லாவற்றிற்கும் போதுமாகையாலும் எழுதுவதற்கும் சிரமமில்லாததாலும், நன்றெனவே தோன்றுகிறது.

தமிழ் எழுத்துக்களும் அவைகள் குறிக்கும் ஆங்கில ஒலிகளும்

அட்டவணை

தமிழ் எழுத்துக்கள் (மெல்)	ஏற்ற ஆங்கில எழுத்து	உதாரணம்	தமிழ்
ப்	P	Post, Rope	போஸ்டு, ரோப்
ப்·	B	Boast, Robe	போ· ஸ்ட்,ரோப்·
ட்	T	Tip, Fate	டிப், வே· ட்
ட்.	D	Dip, Fade	டி· ப், வே· ட்·
ச	CH	Chest, Etch	செஸ்ட், எட்ச்
ஜ	J	Jest, Edge	ஜெஸ்ட், எட்ஜ்
க்	K	Cane, Leak	கேன், லீக்
க்·	G	Gain, League	கெ· ய்ன், லீக்·
வ்·	F	Fat, Safe	வா· ட், ஸேவ்·
வ	V	Vat, Save	வாட், சேவ்
த்	TH	Thigh, Wreath	தை, ரீத்
த்·	TH	Thy, Wreathe	தை·, ரீத்·
ஸ	S	Seal, Base	ஸீல், பே· ஸ்
ச·	Z	Zeal, Baize	சீ· ல், பே· ய்ச்·
ஷ்	SH	She, Dash	ஷி, டா· ஷ்
ழ்·	SH	Treasure, Vision	ட்ரெழ· ர்-விழ-ன்
ம்	M	Met, Seem	மெட், ஸீம்
ந்	N	Net, Seen	நெட், ஸீன்
ங்	NG	Kingly, Long	கிங்லி, லாங்
ல்	L	Light, Title	லைட், டைட்ல்
ற்	R	Right, Tire	றைட், டயற்
	W	Wet, Away	வெட், எவே
ய்	Y	Yet, Ayah	யெட், ஆயா
ஹ	H	High, Adhere	ஹை, அட்· ஹீர்

கன்னனும் கும்பகர்ணனும்

[பண்டிதர் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்]

(முன் ௩௩௯-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிக் கும்பகர்ணனைக் கவனிப்போம்: இராவணன், கும்பகர்ணன், விபீடணன் என்ற மூவரிலும் அறிவிற் சிறந்தவன் கும்பகர்ணனே. அவன் இராவணனின் செயலை வெறுத்தான்; 'பிறன் மனைவியை ஒருவன் கவர்தல் நியாயம் அன்று' என்றுஅவன் தெள்ளிதில் உணர்ந்திருந்தான். தமையன் பிழையைப் பலவாறு கூறிக் கண்டித்தான். அவனைப் போருக்குச் செல்லும்படி இராவணன் கூறினன். அப்போதவன், 'அந்தோ! அண்ணா! இன்னும் அச் சானகி துயரம் தீரவில்லையா? வெஞ்சமர் மூண்டு விட்டதா? வானளாவிய நினது புகழ் மாயுங்காலம் வந்துவிட்டதா? நாம் அழியக் கூடிய காலம் நெருங்கி விட்டதோ? திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ? இது விதியின்வண்ணமே. இராமன் தோள்களை வெல்லலாம்; சீதை மேனியைப் புல்லலாம் என்பதும் நீ நினைக்கத் தக்கவையோ? தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து, நின் மையறு தம்பியோடு அளவளாவுதலே நீ உய்திறம்" எனக் கூறியது போற்றற் குரியது. தம்பியின் கூற்றிற் சீற்றங் கொண்ட இலங்கை வேந்தன்,

"மானுடர் இருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட் டுய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யானது முடிக்கிலேன்; எழுந் துபோ"

எனக் கூறிப் போருக் கெழுந்தான்.

தமையன் அறியாமையைக் கண்ட கும்பகர்ணன் மனம் வருந்தி, தான் போருக்குப் புறப்பட்டான். அங்ஙனம் புறப்பட்டவன் தமையனை நோக்கி,

"வென்றிவண் வருவனென் றுரைக்கி லேன்; விதி
நின்றது பிடர்பிடித் துந்து கின்றது;
பொன்றுவென்; பொன்றினல், பொலன்கொள் தோளியை
நன்றென நாயக! விடுதல் நன்றரோ"

'தலைவ! விதியானது என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது, யான் இறந்த பின்னராவது சீதையை விடுதல் உனக்கு நன்றாம்.

அண்ணா! என்னைக் கொல்பவர் உன்னைக் கொல்லாது விடார்; ஆதலால், பின்னை யெண்ணுதல் பிழை; அப்பெய்வளைதன்னை விட்டுவிடுதல் சிறந்தது' என்றான். என் கூறியும் என்? இராவணன் கேட்டானில்லை. முடிவில் கும்பகர்ணன் புறப்பட்டுப் போகையில், அண்ணனது அடிக்கமலத்தில் தன் முடிபட வணங்கி,

"இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளவெனில் பொறுத்தி, கொற்றவ!
அற்றதான் முகத்தினில் விழித்தல், ஆரிய!
பெற்றனென் விடை" யெனப்பெயர்ந்து போயினான்.

'ஐய! யான் இன்றுவரை அறிந்தோ அறியாமலோ செய்த பிழைகள் எவையேனும் இருப்பின், அவற்றைப் பொறுத்தருள்க" என்று கூறும் கனிந்த சொற்கள் கல்நெஞ்சமுடைய இலங்கைக் காவலன் மனதையும் கலக்கின என்றால், நம் மனம் கனிவதைக் கேட்பானேன்?

கும்பகர்ணன் தமையனிடம் நீங்கா அன்புடையவன். அவனது நன்மையில் நாட்டம் உடையவன்; தன்னை அன்றளவும் காத்த தமையனுக்காக உயிர்விடத் துணிந்தே போருக்கெழுந் தான். செஞ்சோற்றுக் கடன் கழித்தலே தான் செயத்தக்கது என்பதை மானமுள்ள அவ்வீரன் கருதினான்.

போர்க்களத்தில் வீபீடணன் கும்பகர்ணனை யணுகி, இராம னுடன் சேரும்படி வேண்டினான். அதைக்கேட்டு நகைத்துக் கும்பகர்ணன் கூறிய கூற்று மானவீரம் பொருந்தியதாயுளது.

"நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற் (கு)
உயிர்கொடா தங்குப் போகேன்"

'நீரில் தோன்றி மறையும் குமிழியை யொத்த வாழ்வை நம்பி என்னை ஆருயிர்த்துணையெனக் கருதி நெடிது நாள் வளர்த்து இப்போது என்னைப் போருக்கனுப்பிய அண்ணனுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்; யான் உயிர்துறப்பினும் துறப்பேன்; செய்ந்நன்றியறிதலைத் துறவேன்' என்று கூறும் கும்பகர்ணன் கூற்றில் ஒழுக்கமும் மானமும் ஒளிர்வதைக் காண்க.

மீண்டும் அவ்வறிஞன் இளவலை நோக்கி,

"புலையுறு மரணம் எய்தல் எமக்கது புகழ தேயால்"

என்று உயர்ந்த அரசவீரனது சிறந்த கொள்கையை வற்புறுத்திப் பேசுகின்றான்.

'தம்பி! அரசன் தீமை செய்தால் நாம் அறிவு புகட்ட வேண்டியது கடமை. அதனையும் அவன் கொள்ளானாயின், அவனது சோற்றையுண்ட நாம் அவனுக்காகப் போர் செய்து இறத்தலே நன்று; அதுவே உண்டவர்க்கு உரியது' என்று செய்ந்நன்றி யறிதலை வலியுறுத்திக் கூறியுள்ளான்.

"கருத்திலா விறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலா மாகில் நன்றே; திருத்துதல் தீரா தாயின்,
பொருத்துறு பொருளுண் டாமோ? பொருதொழிற் குரியராகி
யொருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா."

மேலும், கும்பகர்ணன் பின்னேனை விளித்து, 'எம்பி! அண்ணன் பகைவன் என்பகைவன் அன்றோ? அவனை அடைக்கலங்கொண்டு, புண்பட்ட நெஞ்சோடு உயிர்வாழ யான் இசையேன்' என்று கூறும் வீரமொழிகள் கும்பகர்ணனது வீரத்தையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் காட்டுகின்றன.

"செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி,
யம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டைய
கும்பிட்டு வாழ்கிலே னியான் கூற்றையும் ஆடல் கொண்டேன்"

இங்ஙனம் கூறிய கும்பகர்ணன், முடிவில் தன்னாலானவரை யுத்தஞ் செய்து தன்கடனைக் கழித்துக் காலன்வாய்ப் பட்டான். கன்னனும் தன் கடனைக் கழித்து மடிந்தான். கன்னனும் கும்பகர்ணனும் 'செய்ந்நன்றி யறிதல்' என்ற சீரிய குணத்துடன் ஒழுகியதே அன்னார் தனிச்சிறப்பைக் காட்டாநிற்கின்றது.

மகிழ்ச்சியுடன் இருக்கக்கூடிய காலம் இதுவே; மகிழ்ச்சியுடன் இருக்கக் கூடிய இடமும் இதுவே; மகிழ்ச்சியுடன் இருக்கும் வழியோ மற்றவர்களை மகிழ்விப்பதே.

—இங்கர்ஸால்

கவின்கலைப் பகுதி: FINE ARTS

மக்கட் பிறவியும் மாண்புறு கலைகளும்

[திரு, S. ஈசுவரமூர்த்தியா பிள்ளையவர்கள், ஓவியப் புலவர்]

"நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்,
மண்மாண் புனைபாவை யற்று."

நன்னெறியில் ஒழுகப் பிறந்த மக்கள் தீநெறிக்கண் ணொழுகின், அரிதிற் கிடைத்த இம்மக்கட் பிறவியின் பயனை யிழந்து விடுகிறார்கள்.

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே"

—திருமந்திரம்.

உண்டுறங்கித் தங்க ளினத்தைப் பெருக்குந் தொழில் எல்லா உயிர்களுக்கும் பொதுவே யெனினும், ஆறறிவுவாய்ந்த மக்கள் தங்கட்குக் கீழ்ப்பட்ட பிற உயிர்களைப்போலன்றி சிறப்புறு செயல்களைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்கள். "மனிதன் மதமுள்ள ஜந்து" வென மேனாட்டார் கூறுவது முற்றிலும் உண்மையே. மதத்தினால் வரும் நன்மை தீமைகளைப் பெற்றனுபவிக்க வேண்டியவன் மனிதனே.

வாய்மையால் அகம் தூய்மையாகும். பழக்கத்தினாலேயே மனம் சுத்தப்படும். "கற்றதொரு கல்வி மனப் பழக்கம்" என்பது ஔவையார் முடிபு. மனப்பழக்கமில்லாத கல்வி, கல்வியோடு சேர்ந்ததன்று. பல நூல்களிலுமுள்ள பொருளை நுணுகி நோக்கி மாட்சிமைப் பட்டுச் சென்ற அறிவே, கல்வி கற்றோருடைய விலக்கணம். அவ்விதம் மனம் பழக்கப்பட்டு மேம்பாடடைந்த வொருவனை மருளென்னும் பேய் விட்டகலும். நாற் கரணங்களில் மனம் தெளிவுபட ஏனைய மூன்றும் அப்பினுப்புப்போல ஒன்றெனக் கலந்து, புத்தி கலங்காது, சித்தஞ் சிதையாது, அகங்காரம் அணையாது, திரையற்ற நீர் போல் தெளிவுற்று, புனிதமாகி,

அருள்மயமாகப் பிரகாசிக்கும், இவ்வருளொளியைப் பெற்றவரே மகாஞானி. அவர் உள்ளுணர் அறிவு அழகுருவாம். அவ்வழகு வடிவு உண்மைக்கடவுள். ஆகவே, மெய்க்கல்வி கற்றவொருவன் இறைவனின் எண்குணங்களையும் ஐம்புலன்களாலும் நுகருகிறான். அந்நுகர்ச்சி விளக்கமே கலைகள்.

மனிதன் தன்னுணர்ச்சியைத் தெரிவிக்க முதன் முதலில் நேர்ந்த கருவிகளே கலைகள். மிருகங்களின் தோல்களை ஆடையாகப் பூண்டு, எழுதப் படிக்கத் தெரியாதிருந்த புராதன காலங்களிலேயே சித்திரம் வரைதல், இசைபாடுதல், நடனமியற்றல் ஆகிய இவைகளை மக்கள் அறிந்திருந்தனர். பச்சிளங் குழந்தை கற்பலகையில் தன்னருமைப் பூனையை மிக வெளிய' நடையில் எவ்விதம் வரைந்து காட்டுகிறதோ, அதேபோன்று தங்களைச் சூழ்ந்துள்ள பண்டங்களை ஆதி மனிதர்கள் வரைந்து காட்டினார்கள். அவர்கள், ஆகாரத்தைத் தேடி வேட்டையாடிக்கொணர்ந்து சமைத்தருந்திய பின்னர், ஒழிந்த நேரங்களில் தங்க ளனுபவங்களைக் கற்பாறைகளின்மீது கூரிய கற்கள் கொண்டு செதுக்கினார்கள் என்பதற்குப் பல சான்றுகளுள. இவ்விதம் தன்னுடல் நலம் பற்றி வாழ்ந்துவந்த மனிதனுக்கும், ஆன்ம நலம்பற்றி யுலகிற்கு நவில முயன்ற மனிதனுக்கும், இடையேயுள்ள கால அளவு இனைத்தெனக் கூறற்கரிது. மனிதன் நாள்தோறும் உயர்வுற முறைகளைத் தேடுவா னன்றித் தாழ்வடைய நினையான். அதற்கனுகூலமாக, அவன் மனநிலை பக்குவமடையும் வழிகளை ஆராய்வுழி, உண்மைப் பொருளை நாடுகிறான். மெய்ப்பொருணாட்டமிகவே, கடவுட்டன்மையை அவன் உணர்கிறான். அவ்வுணர்வினால் தன்னையேதான் உணர்கிறான். அவ்வுணர்ச்சி மேலிட தன்னுள் அவன் தனிப்படக்கலந்து நிற்கும் நிலையை யுணர்கிறான்; அத்துவித நிலையை யடைகிறான். அப்பொழுது அழகினுருவை யவன் கண்டின்புறுகிறான். தான்பெற்ற அவ்வின்பம் அனைவரும் அடையப் பெருங் கருணைகொண்டு அவ்வழகை நிறுவியவைகளே கலைகள்.

அழகு எனின் என்னை? உணர்ச்சியெனில் யாது? என்ற வினாக்களுக்கு விடையிறுக்க எளிதி லியலாது. ஆனாலும், அழகும் உணர்ச்சியும், உடம்பிற் கூணளித்தற்போல, ஆன்மாவிற்கு ஆனந்

தத்தைவிளக்கக்கூடிய உருவங்களாகவோ, ஏழிசைகளாகவோ, பன்னிறப் படங்களாகவோ அவைகள் வெளிப்படு மியல்புடையன. என்பு தோல் தசை யசைவுகளேபோன்று அவை ஆன்ம சக்தி யியக்கங்களே. புன்புலால் யாக்கைச் சுகமுற, உடையும், ஊணும் வேண்டுவதே போல், தேசுறு மனமும் உள்ளுணர் உணர்வை வெளிப்படுத்திச் சாந்தியடைவது மனித இயற்கைகளுள் தலையாயதாம்; அது மிக வலிமை வாய்ந்தது. சின்னஞ்சிறுமியொருத்தி மிகப்பொறுமையுடனும், கருத்துடனும் மணற்சிற்றில் கட்டுவதும், "நான் ஒரு வீடு கட்டினேன்" என்று கூறி வாயார மனமார மகிழ்வதும் இவ்விதச் சக்தியின் தன்மையே. அதே சக்திதான், கூடகோபுரங்களையும், மாடமாளிகைகளையும், தேடரியசித்திரங்களையும், செயற்கரிய நடனங்களையும், யாழிசைப் பாக்களையும் கற்பித்தது. கடவுள் தண்ணருட்டிறனின் அறிகுறியாக அகிலமெல்லாம் படைத்தன ரென்றும், அவற்றினொன்று மிப் பூவுலகில் வாழும் நாம் அவருடைய உண்மை அருளையும், முடிவில் அவரையும் பல படைப்புகளிடையே கண்டு கலைவழி விளக்க முயல்வதே இப்பிறவியின் நோக்கம் எனவும் கூறுப.

எக்கலைப் பகுதியும் சிறப்புற இருதிறத்தார்வேண்டும். அதை ஆக்குவோனும் கண்டுமகிழ்வோனும் ஆகியோரே அவ்விருதிறத்தினர். ஆக்குவோன் புகுத்திய மர்மங்களை யறியாது, காண்போன் அக்கலையின் மகிமையைத் தெரிய வியலாது. அன்பு, வருத்தம், ஒப்புரவு, வணக்கம் இத்தகைய குணங்களின் உணர்ச்சியின்றிக் கலைகள் புறம் வந்ததில்லை. காண்டலரிய அன்பின் வழி வந்த கலைகள் மிகப்பல. உடல்பற்றிய மனைவி, மக்கள், சுற்றம் இவர்கள்பால் நிகழும் அன்பினும், உயிர்பற்றிய கடவுள், உண்மை, வீரம் ஆதிய பருப்பொருளல்லாதன வற்றின் பால் நிகழும் அன்பினும் விளக்கமுற்ற கலைகள் தம்மில் வேறுபாடுடையன. மிக நேசிக்கப்படும் மண், பெண், பொன் மூன்றையும் ஒருவி மாயையாம் இப்புவி வாழ்வை வெளிப்படுத்தும் கலைகள் சிலவேயாயினும், துக்கத்தால் நிகழ்ந்தது பற்றி மனதை மிக உருகச் செய்வன துன்பியற் கலைகளே. வணக்கத்தால் நிகழும் கலைகள் மிகச் சீரியவைகள். செம்மையான சித்திரங்களும், ஈசனியங்கும் கோவில்களும், ஆண்டுள உருவச்சிலைகளும், திருக்கோபுரங்களும் மனிதனைவிட மேலானவைகள். ஏனெனில், அவைகளில்

தொன்று தொட்டுள்ள கடவுட்டன்மையும், பண்டைக்கால உண்மைகளும் படைப்புகளி னமைப்பும் வெளிப்படுகின்றன. ஆகவே, மனிதனின் தூய வுணர்வின் மிகவுயரிய நிலையை வெளிப் படுத்தற் குரியன சீரிய நுண்கலைகள் என்பன. அதுவன்றி, பாசம் நீங்காப் பாமரர் தேடும் சிற்றின்ப விளக்கங்கள் கலைகள் எனக் கொள்ளல் தவறு.

நமக்கு இறைவனருளிய பொருட்களுள் அரிதினு மரிது கலைஞானமெனும் நுண்பொருளே. எங்கணும் எஞ்ஞான்றும் நம்முடனுறைவ திதுவே. கடைவீதிவழிச் செல்லும்பொழுதும், குயவன் வனைந்த பாண்டங்களைப் பார்க்கும்பொழுதும், நகைகள் பலவும் கண்கவர் வனப்புடன் திகழும் பொழுதும், கலைக்கதிர் அங்குத் தோன்றாம லிருக்கவில்லை. அப் பொருட்களிலொன்று புதிதாக நேற்றுச் சமைந்ததாயினும், அதன்தோற்றுவாய் பண் டைநாட் பயிற்சியிற் பதிந்து கிடக்கிறது. ஆலயங்களி லமைத் திருக்கும் சீரிய சிற்பத்திறனுறு வாயிற்படிகளும், வானமளாவிய வாயிற் கோபுரங்களும் உயர் தூண்களும், தற்போதமைக்கப்படும் விசித்திர விநோத நாகரிக இருக்கைகளும் பல நூற்றாண்டுகட்கு முன் மனிதருள் ளெழுந்த அருட்சக்தியின் பெருமுயற்சிப் பய னென்பதில் ஐயமில்லை.

அகத்திற் கண்டதே புறத்தில் தோற்றமுறும். அகமெனில் உள்ளதற்கிடமாயுள்ள உளம். நாம் காணும் பரந்த பார், நம்முட் காணு முளத்தின் நிலையளவே. "உளம் போலுலகம்" என்பது ஆன்றோர் வாக்கு. மனிதனே பல உலகங்களின் சாயையெனக் கொள்வர் ஒருசாரார். ஒருவன் மனதிற்கும், அவன் எண்ணங் களின் தன்மைக்கு முள்ள தொடர்பு, அவன் செயல்களில் தெரிகின்றது. யாவர்க்கும் புறக்கருவிகள் அகக்கருவியுடன் மிக ஒற்றுமையாக உழைக்கின்றன. மனதிற்றோன்றுங் கருத் துக்கள் செம்மை-சான்றவைகளாயின் அவன் செய்கைகளும் சீரியனவே. அதுவன்றி, அவைகள் தாழ்ந்தவைகளாயிருப்பின், அவன் கருமங்களும் இகழத்தக்கவைகளே. அகத்தெழு முணர்வு களைப் பொதிந்து நிறுவிய ஓவியம், இசை, நடனம் ஆகிய நுண் கலைகள் ஒவ்வொரு நாட்டிலும் முற்காலத்தும் தற்காலத்துமுள. அவை அத் தேசத்தாரின் நாகரிக நிலையை நாட்டும் சான்றுகள்.

நம் முன்னோர்களுடைய சால்புடைக் கலாநிதிகளை யுற்று நோக்குந்தோறும், நம் சுதந்திரத்திற்குரிய வடையாளங்கள் அவைகள்பால் தோன்றுகிற. முன்னையோர் பொருள் பின்னையோர்க் காதலின் அவைகள் நம்முடையவைகளே. பழக்க வழக்கங்களோ, காலசக்கரமோ, அவைகளை அழித்தற்கியலா. நாம் எத்துணை நல்குரவடையினும், நம்முடைமைகளை நினைக்குந்தொறும் நாம் அத்துணைச் செல்வத்தையும் சிந்தையில் பெறுகிறோம். "செல்வமென்பது சிந்தையின் நிறைவ"ன்றே? இன்று நமக்கு ஆனந்தத்தை விளைக்கும் அழகான இயலுருவங்களும், இசைப்பாக்களும், நாடகப் பகுதிகளும், நம் மூதாதையர் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சேர்த்து வைத்த கலைப் பொருள்களும் தேசகாலச் சரித்திர வாராய்ச்சியின் விளக்கொளிகள். வருடங்கள் பல செல்லச் செல்ல, பாங்குறு பொருள்கள் கலையாராய்ச்சிக் கழகங்களில் அதிகமாகச் சேமித்து வைக்கப்படுகின்றன. ஏனெனில், அவைகள் முற்கால நாகரிகச் சின்னங்களாகவும், தோன்றி மறைந்த பல சாதியாரின் காலநிர்ணய ஆதாரங்களாகவு மிருப்பனவுமன்றி, நம்மறிவு வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன.

எவ்விடத்தும் மலிந்து தோன்றும் கலாநிதி விளக்கங்களில், எவை உள்ளுணர்வை வெளிப்படுத்துகின்றன? எவை வினையளவையான் சிறப்புற்றிருக்கின்றன? வென்று பகுத்தறிதல் வேண்டும். இவைகளை ஆராயுமோர் நியதியில் நம்முன்னையோர் நிறுவிய நிதிகளே சிறப்புடையன வென்பது தெளிவுறுகின்றது. நீண்ட காலப் பழமை பற்றியோ, நிகழ்கால நியமனம் பற்றியோ எக்கலையையும் உயரியதெனக் கூறத் துணிதல் பெரும்பாலும் புறக்கணிக்கத் தக்கது. காண்போர் மனதில் கணக்கற்ற அரிய பெரிய கருத்துக்களை விளக்கமுறப் பதித்து, அவர் தம்முள்ள நிலையை உயர்த்தும் அக்கலையே சீரியதெனக் கொள்ளல் தகும். என்னையோவெனின், கலைகளும் இயற்கையும், பூவும் மணமும் போலத் தம்மிலொன்றை விட்டொன் றகலாத தன்மையை யுடையன. மனிதன் தன்னியற்கையான கடவுட் டன்மையைக் கலைகளின் வாயிலாய் உலகிற்கு விளக்கிக் காட்டுவதே பிறவிப்பயன். அரிய சிற்பவேலைக ளமைந்த திருக்கோவில்களும், உயர் கோபுரங்களும், பல நூற்றாண்டுகளாய் நிலைபெற்று நின்றும் இன்று சமைத்தவே போற்றோன்றி, ஆத்ம நிலையை யுயர்த்தும் அஜந்தா,

எல்லோரா, பாக், எலிபன்டா முதலிய குகைகளிற் காணும் சித்திரங்களும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாக்களும், உருவபேதம், பிரமாணம், பாவனை, அலங்காரம், அழகு, உண்மை, வர்ணனை முதலியவை யொருங்கே யமையப்பெற்று விளங்கும் மெய்யொளிர் விக்கிரகங்களும், உயிருலவு சிலைகளும், கலைகளின் கருத்தை விளக்கும் சின்னங்களே. இவைகளன்றோ, நம்முன்னைய நாகரிக உயர்நிலையையும், தற்கால நாஸ்திகச் சீர்குலைவையும் காத்து, புத்துயிர் புகட்டி நிற்கின்றன. ஆதலின், மக்கட் பிறவியில் மாண்புறு கலைகளை மிகைபட வளர்த்து மின்னொளிர் செஞ்சடை நீர்மலி வேணியனடி வணங்குதுமே.

புத்தர் பிரான் பொருண் மொழிகள்

[திரு. அ. நடராச பிள்ளை யவர்கள்]

11. இல்லறத்தார்களின் கடமைகள்

இல்லறத்தோர்களே!

க. அன்புடை மொழிகளான் மன்பதை போற்றுமின்.
உ. விருப்புடைச் செயல்களால் விருந்தினை யளிமின்.
ந. நெஞ்சக வன்பினால் நினைமி னுயிர்களை.
ச. அற்றார் தம்மை யுற்றா ரென்மின்.
ரு. அமிழ்தே யாயினு மவர்க்கிட் டுண்மின்.

12. துறவறத்தார்களின் கடமைகள்

துறவிகளே!

க. மன்பதை யெல்லா மன்பென மதிப்பீர்.
உ. அறவியல் பலவு மறிந்தடங்கி யுறைமின்.
ந. சமயநூ லுணர்ந்து சாற்றுவீர் பலர்க்கும்.
ச. ஐயப் பொருள்களை யகற்றுவ துங்கடன்.
ரு. வீட்டு நெறியினை யுணர்ந்தே காட்டுமின்.

குறிப்பு :—இவ்வறவுரைகள் புத்தபகவான் போதித்த புத்ததருமம் என்ற நூலிற் கண்ட தொடர்களின் பொருண் மொழிகளாம். எந்நாட்டவருங் கொண்டாடும் அவர்தம் பொன்னுரைகளை நந்நாட்டவர் கொண்டு நலம் பெறவேண்டி, அவைகள் செப்பனிடப்பட்டுச் செல்வியின் செவ்விதழில் வெளி வரலாயின.

மாணவர் பகுதி

கல்வியும் நூல்நிலையமும்

[திரு. நாகை. த. குமாரசாமி அவர்கள்.]

(முன் உ௰ச௲ம் பக்கத் தொடர்ச்சி)

நூல்நிலையமாவது, மொழிதோன்றிய காலம்முதல் இன்று வரையில் இயற்றப்பட்ட சிறந்த அறிஞர்களுடைய நூல்கள் பலவற்றைத் தொகுத்து அமைத்துள்ள இடமாகும். இத்தனை நூல்கள்தாம் ஒரு நூல்நிலையத்தில் இருக்கவேண்டும் என்ற வரையறை இல்லை. நூல்நிலையம் அமைப்பவர்தம் பொருள் வலிவுக்குத் தகுந்த அளவானே நூல்நிலையம் அமையும். எத்தனை நூலானாலும் அவற்றை ஒன்று சேர்த்துத் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் வகையில் வைக்கவேண்டும். நூல்நிலையங்களின் பயனை உள்ளவாறு அறிந்து பயன்படுத்துவதில் நம்மவர்களைவிட மேல்நாட்டவர்கள் வல்லவர்கள் எனலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூல்நிலையம் இருக்கவேண்டும். அரசாங்கத்தாராலும், பெரிய கழகத்தாராலும் இற்றைநாள் நம் நாட்டில் பல இடங்களில் நூல்நிலையங்கள் நிறுவப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். நூல்களை வாங்கிச் சேர்த்து ஒரு நூல் நிலையம் அமைப்பது வீண் செலவாகாது. அது மிகவும் சிறந்ததொரு செயலேயாகும். நல்ல நூல்களும் பத்திரிகை களும் இல்லாத ஒரு வீடு சன்னல்கள் இல்லாத வீட்டை யொக்கும். வீட்டுச்சாளரங்கள் நல்வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றி யமையாததோ அவ்வளவு இன்றியமையாதது ஒரு நூல்நிலையம் என்றறிக. வீட்டில் நூல்கள் ஒழுங்குபட அழகாக அமைக்கப்பட் டிருப்பின் அவ்வீட்டுக் குழந்தைகள் சிறு பருவம்முதற்கொண்டே பையப்பைய நூல்களைப் பயன்படுத்த அறிந்து கொள்ளுவார்கள்.

மனிதன் யாதொரு வேலையும் இன்றி வாளா இருக்கும் நேரங்களிலேதான் வீண் எண்ணங்களிலும், அற்பச் செயல்களி லும் ஈடுபட்டுத் தன் தூய்மையை இழக்கிறான். நூல்நிலையம் ஒன்று அவன் அருகில் இருக்குமானால், அல்லது ஒரு நூல்நிலையத்தில்

அவன் இருப்பானானால், மேற்கூறியவாறு அவன் உள்ளம் மாசுற ஏதுவிராது. கெட்ட எண்ணம் நம்மனத்தில் புகும்பொழுது, நமக்கு விருப்பமான ஒரு நூலை எடுத்துப் படிக்க, தீய எண்ணம் நம்மை விட்டு அகலும். பலவகைப்பட்ட மலர்ச்செடி கொடிகள் வைத்து அழகாய் வளர்க்கப்பட்ட பூம்பொழில் ஒன்றில் புகுவாள் ஒரு மங்கை, ஆண்டு மலர்ந்து நிறைந்த மலர்களின் மணத்தை நுகர்ந்தும், தன் கண்ணுக்கும் கருத்துக்கும் இசைந்த ஏதாவதொரு மலரைப் பறித்துக் கரத்தில் கொண்டு அதனை முகர்ந்தும், கண்களில் ஒற்றிக்கொண்டும் இன்பம் நுகருவாள் அன்றோ? அந்தக்காலத்தில் அந்தத் தோட்டத்தில் அப் பெண்மணி மனத்தில் பூக்களின் நிறமும், மணமும், அழகும், மென்மையும் தவிர வேறு வகையான மாசு படியாது என்பது உண்மை. இப்படியே சிறந்த ஆசிரியரால் இயற்றப்பட்ட நூல்கள் சேர்த்து வைக்கப்பட்ட இடத்தில் இருக்கும் அறிஞர் தம்காலத்தைப் பயன்படுத்தி இன்பமடைகின்றனர்.

வீடுகளுக்கு ஒருதனிப்பட்ட அழகைக் கொடுப்பது நூல்நிலையமாகும். அனேகர் தாம் வாங்கி வைக்கும் நூல்களில் யாதொரு குறிப்பும் செய்யாமல் புத்தப் புதியவாக வைத்திருக்க விரும்புகிறார்கள். இது மிகவும் தவறான விருப்பமேயாகும். ஒரு நூலை வாசிப்போர் அதில் தங்களுக்கு மிகவும் முக்கியமானவையாகத் தோன்றும் இடங்களைக் குறித்து வைக்கவேண்டும். குறிப்புகள் செய்வதால் நூல் கெட்டுப் போகாது; ஆனால், புதியதாயிருந்ததை விட இப்பொழுது அதிகப் பயன்படும்.

தன்னுடைய இளமைப் பருவத்திருந்தே நூல்களைப் போற்றிப் பயன்படுத்திக் கொள்ளும் எவனும் வயது முதிர முதிரப் பிறருக்குப் பயன்படுவான். ஒருவன்தன் உடையிலும் உணவிலும், வேண்டுமானால் வேறெதிலேயும் சிக்கனமாய் இருக்கலாம். ஆனால், நல்ல ஆசிரியர்கள் இயற்றிய நூல்களைச் சேர்த்து வைப்பதில் சிக்கனம் காட்டவேண்டா. சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக் கனுப்பி உயர்தரக் கல்வி பெறுமாறு செய்ய இயலாதவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தங்களால் இயன்றமட்டும் நூல்களை வாங்கிக் கொடுக்கட்டும். நாளடைவில் அவ்விளைஞர்கள் கல்வியிற் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் படிந்து வளர வேண்டிய இடம் வீடேயன்றோ? வீட்டில் சிறு பிள்ளைகளா யிருந்து பழகும் பழக்கந்தான், பின்னர் மனிதராய் வெளிவந்த காலத்து நம்மிடந் தோன்றி நம் வாழ்க்

கையில் படிகிறது. இதனால்தான் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று. நம் நாட்டில் இன்னும் சிறந்த அறிவாளிகள் தோன்ற வேண்டுமானால், முதலில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறு நூல்நிலையம் தோன்றட்டும்.

நம்மிடத்தே ஒரு புதிய இன்பமும், மேலான உணர்ச்சியும், ஏற்படவேண்டுமானால், ஒழுங்காக ஒவ்வொருநாளும் நல்லநூல்களைப் படிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். எடுத்த உடனேயே ஏராளமாகப் படிக்கவேண்டும் என்பதில்லை. 'சிற்றுளியால் கல்லும் தகரும்' என்றபடி, சிறுகச்சிறுகப் படித்தால், நாளடைவில் நன்மை அடையலாம். 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டா' என்றதற்கேற்ப, நாம் படிப்பது எவ்வளவு குறைவாயிருந்தபோதிலும், ஒவ்வொரு நாளும் படிக்கவேண்டும்.

இங்ஙனம் மக்கள் நூற்பயிற்சியில் நன்மை அடையவேண்டுமானால், நம்நாட்டில் இன்னும் நூல்நிலையங்கள் பல்கி வரவேண்டும். பொதுஇடங்களில் அமைக்கப்பெறும் நூல்நிலையங்கள் ஏராளமான நூல்கள் அமைக்கப் பெற்றனவாயிருக்கும். அவற்றில் சென்று படிக்கும் அறிஞர், தமக்குச் சிறந்தது என்று தோன்றும் நூலை எடுத்துப் படிக்கலாம். அல்லது அங்கிருக்கும் பலநூல்களில் சிறந்தது எதுவென்று தேடிப்பார்த்து எடுத்துப் படிக்கலாம். இவ்வாறு பொது நூல்நிலையங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

'நூல் நமக்கு ஒரு நல்ல நண்பன்' என்றார் ஒரு மேனாட்டு ஆசிரியர். கோல்ட்ஸ்மித்து என்ற ஆங்கில ஆசிரியர், "முதன்முறை நான் ஒரு சிறந்த நூலைப்படிப்பது, ஒரு நண்பனைச் சம்பாதித்தது போன்றது. நான் முன்னரே படித்திருந்த ஒரு நூலை மீண்டும் படிப்பது பழைய நண்பன் ஒருவனைச் சந்திப்பதை யொக்கும்," என்கிறார். இவ்வாறே பல ஆசிரியர்கள், நூல்களைத் தங்களுக்கு உற்ற தோழர்களாக நினைத்து, அவற்றில் பழகி, நன்மை அடைந்திருக்கிறார்கள்.

முடிவாக, ஆனால் மிகவும் முக்கியமாக, நூல் நிலையத்தைக் குறித்து நான் கூற விரும்புவது இஃதாகும்:—

தம் பூதவுடல் நீங்கியும் இன்றுகாறும் தம் புகழ்உடலம் நீங்கப் பெறாத அறிவானன்ற ஆசிரியர் பலர், தம்மை அண்டி வந்தார் அறியாமையைப் போக்கி அறிவூட்டி இன்பம் அடையச் செய்யும் பெருங் கருணையோடு ஒருங்கு கூடியிருக்கும் கழகமே நூல்நிலையமாகும். எனவே மக்கள் நூல்களை மிகுந்த விருப்புடன் சேர்த்து வைத்தல் வேண்டும்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

*இந்திய ஐரோப்பியப் பெருங்குழு இந்தியாவே பிறப்பிடம்

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்—
காழி. சிவ கண்ணுசாமி. B. A.]

ஆரியக் குழுவினர் வடதுருவத்திற் றோன்றியவர்களென்றும், அஸ்ஸீரியாவில் தோன்றியவர்களென்றும், மத்திய ஆசியாவில் தோன்றியவர்களென்றும் பலபடக்கூறுவர். இக் கூற்றுக்களெல்லாம் அறிவியற்பகுதியின் ஒவ்வொரு துறையையே தனித்தனிப்பற்றி யெழுந்தனவாகும். யானை பார்க்கச் சென்று அதன் உறுப்புகளில் ஒவ்வொன்றைத் தொட்டு அதைக்கொண்டு யானையின் வடிவை ஊகித்தறிய முயன்ற நான்கு குருடர்களின் கதையையே இஃதொக்கும். நிற்க, இதுகாறும் அறிவியற்பகுதியில் ஒவ்வொரு துறையிலுங் கிடைத்துள்ள அரியபெரிய உண்மைகள் பலவற்றையும் ஒருங்கே திரட்டி ஒப்புநோக்கி முடிந்த முடிபொன்றை, இப்பொருளைப் பொறுத்த வரையில், எவரும் எய்தியதாகத் தெரிவதற்கில்லை. மொழியிலக்கணத்தை மட்டுமோ, ஒளிநூலைமட்டுமோ, அன்றி மதநம்பிக்கைகளை மட்டுமோ அடிப்படையாகக் கொண்ட ஆரியர்தம் தோற்றமே வரையறுத்து இதுகாறுங் கூறப்பட்டு வந்துள்ளது. எனவே, அக்கொள்கைகள் ஒன்றிற்கொன்று முரணாக இருப்பது இயல்பேயன்றோ? கல்கத்தா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஏ. ஸி. தாஸ் என்பவர் எழுதி வெளியிட்டுள்ள ஒரு நூலில்தான் முதன் முதலாக நிலநூலும் ஒரு கருவியாக இக் கொள்கையை வரையறுக்கக் கையாளப்பட்டுள்ளது. நிலநூல் தெரிக்கும் உண்மைகளினுதவியால் இதுவரையில் வெளிவந்துள்ள ஆரியர் தோற்றங் குறித்த பலகொள்கைகளையும் இயன்றவரையில் கண்டித்து ஒதுக்

---

*இஃது, அரசாங்கக் கண்காணிப்பொறிவலாளராயிருந்து காலஞ்சென்ற சிவபுரம் பெருநிலக்கிழவர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் 1923-ம் ஆண்டில் வட ஆந்திர நாட்டிற் செய்த ஆங்கிலச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பாகும்.

கிய அவ்வாசிரியர் இறுதியில் மத நம்பிக்கைகளில் அழுந்தி ஆரியர் தோன்றியது சிந்துநதிப்பகுதியில் என்று கூறியொழிந்தனர். இமயமலையிலும் சிவாலிக் தொடர்களிலுங் காணப்படும் தொன்னில உறுப்புண்மைகளை அவர் அறிந்திருந்தாராளுல், அவர் கொண்ட சிந்து நதிப்பகுதி உலகத் தோற்றத்தின் மூன்ருவதோ நான்காவதோ ஆன ஊழிகளில் தோன்றியிருக்க வேண்டுமே யொழிய முதலாவது இரண்டாவது ஊழிகளில் தோன்றியிருத்தல் முடியாதென்பதைக் கண்டுகொண்டிருப்பார்.

இனி, குமரிக்குத் தென்பாலிருந்து கடல் கோட்பட்டதாகக் கூறப்படும் இலெமூரியா என்ற குமரிநாட்டு உண்மை இன்மைகளை ஒருபுறம் விடுத்து, தற்போது, தக்காணந் தொடங்கித் தெற்கு நோக்கி நீண்டுள்ள தென்னிந்திய நிலப்பகுதியின் தோற்ற காலத்தை ஆராய்வாம். உலகத்தோற்ற காலத்தில் எத்தகைய நிலத் தோற்றங்கள் இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுமோ அத்தகைய தோற்றங்கள் இத் தென்னிந்தியப் பகுதியில் மட்டும் எப்பொழுதும் எத்தகைய மாறுதலுமின்றியிருந்து வருவதாக நிலநூல் உறுதிகூறுகின்றது. பேரூழிகள் தோன்றுவதற்கு முன்னரும் பின்னரும் உலகத்தின் வெப்பதட்பநிலை உயிர்கள் தோற்றமுறுவதற்கும் விரைந்து வளர்ச்சியுறுவதற்கும் ஏற்றதாகவே இருந்து வந்தது என்பதும் நிலநூல் வரையறுத்துக்கூறும் உண்மையேயாகும். இவ்வுண்மை பல அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதொன்று. முதலில் உலகத்தின் மையப் பகுதியே குளிர்ச்சியுற்றது; அதன் பின்னர் வடபகுதியும், துருவங்கள் இறுதியிலுமாகக் குளிர்ச்சியுற்றன. உலகத்தின் மையப் பகுதி குளிர்ச்சியுறத் தொடங்கியதுமுதல் அதன் அக்வெப்ப நிலை படிப்படியாகக் குறைந்து புறவெப்பமாகிய சூரிய வெப்பத்தை யொத்த தொரு நிலைக்கு வந்ததும் மேலுங் குளிர்ச்சியுருமல் நிலைத்துவிட்டது. அதனுலேயே அந்நிலப் பகுதி இடையிடையே சிற்சில காலங்களில் தோன்றும் சில சிறு மாறுதல்கள் நீங்கலாக எக்காலத்திலும் ஒரேபடித்தான வெப்பதட்பநிலையை யுடையதாயிருந்து வருகின்றது. துருவங்களோ ஏனைய பகுதிகளை நோக்க மிகப் பிற்பட்ட காலவரையறையிற் குளிர்ச்சியுறத் தொடங்கினுலும் விடாமல் குளிர்ந்து கொண்டே போகின்றன. என்? போதிய புறவெப்பமாகிய சூரிய வெப்பம் ஆண்டு இல்லாமையினுலேயே.

எனவே உலகத்தின் மையப் பகுதியிலமைந்திருக்கும் தென்னிந்தியப் பகுதி உலகத் தோற்றகால முதற்கொண்டே மக்கள் உயிர் வாழ்தற்கு எற்றதாயிருந்து வந்ததென்பது எளிதிற் போதரும். தக்காணத்திற்கு வடக்கிலும், சீனக்கடலுக்கும் வடகடலுக்கு மிடையிலும், மூன்றாவது ஊழிக்காலம் வரையிலும் நிலமின்றி நீரேயிருந்து வந்ததென்பது குறிக்கற்பாற்றும்.

குறைகோப்பு (The Missing Link)

உயிர்நூல் வல்லாரும் தொல்லுயிராய்ச்சியாளரும் ஆதி மனிதன் அறிகுறிகளையோ, வளர்ச்சி நெறிமுறையில் காண வியலாதவாறு மறைபட்டுக்கிடக்கும் குறைகோப்பையோ தேடிப் பிடிக்கவேண்டுமானல் தென்னிந்தியப் பகுதியிலோ அதன் தெற்கே யமைந்துள்ள பகுதியிலோதான் தேடவேண்டும் என்று ஊகித்துள்ளனர். இவ்வூகம் எறக்குறைய சரியான தொன் றென்றே* பின்னர் சாவகத் தீவிற் கண்டெடுக்கப்பட்ட ஒரு மண்டையோட்டைக் கொண்டு அறியக்கிடக்கிறது. வளர்ச்சி நெறிமுறைக் கொள்கையை வலியுறுத்தித் தெரிப்பதற்கான பல திறப்பட்ட ஆதாரங்களைத் தென்னிந்தியப் பகுதி உட்கொண்டு உலகவளர்ச்சித் துறையில் தலைசிறந்து விளங்குகிறது என்று ஒரு ஸ்விஸ் ஆசிரியர் உளமாரக் கூறியுள்ளார்; ஆயினும் அவ்வாறு கூறிய அவரும் மதச் சார்பினலீர்க்கப்பட்டு, மனித உருவத்தின் திருந்திய படைப்பை மட்டும் ஈடன் தோட்டத்தில் உண்டாக்கித் தருவது கிறித்துவக் கடவுளுக்கே உரியதாயிருந்தது என்று உடன்கூறி யொழிந்தார். எனினும் இயற்கையின் திருந்திய தோற்றங்களெல்லாம் தென்னிந்தியாவில்தான் காணக்கிடப்பதாக இருக்கின்றன என்ற உண்மையை மட்டும் எந்த அறிவியலா ராய்ச்சிக்காரும் மறுக்கமுடியாது. தென்னிந்தியப் பகுதியில் தான் முதன்முதலாக மனிதன் தோற்ற முற்றான் என்றும்

---

* மனிதன் மந்தியிலிருந்து வந்ததாக டார்வின் என்பார் கூறிய வளர்ச்சி நெறிமுறையை ஐயுறாமல் எற்றுக் கொள்ளவேண்டியதுதான் என்று பேராசிரியர் எலியட் ஸ்மித் என்பவர் இலண்டனில் சென்ற பிப்ரவரித் திங்கள் 17-ம் நாளன்று பல புதிய ஆதாரங்களோடு கூறியிருக்கும் கட்டுரைக்குறிப்பு 5-3-1934 "இந்து" நாள்தாளில் வெளிவந்திருப்பதை நோக்குக, —கா. சிவ. க.

அங்கிருந்து மேற்கிலுந் தெற்கிலும் நாளாவட்டத்திற் சென்று குடியேறினனென்றும் எடுத்துக்கூறுவதற்கு வேண்டிய அறிவியலாதாரங்கள் அளவுசங்கையற்றுக் காணக்கிடக்கின்றன. தென்னிந்திய மக்கள் தொகையில் மிகவே, அவர்தம் பண்டைய நாகரிக முறைப்படி உணவிற்கு வேண்டிய கிழங்குகள் பழங்கள் முதலியவற்றைப் போதிய வளவுக்குக் கிடைக்கப்பெற்றிலர்; எனவே இருந்த இடம் நீத்து மெல்ல மெல்ல வடக்கே நகர்ந்து சென்றனர். வடதுருவம் வரையும் அவ்வாறு அவர்கள் சென்றிருந்ததாகத் தெரியவருகிறது. அவர்கள் அவ்வாறு சென்ற காலத்தில், முன் கூறியவாறு, துருவங்களின் வெப்பதட்பநிலை தென்னிந்திய வெப்பதட்ப நிலையை யொத்ததாக இருந்தது. பின்னர் அந்நிலையிலேயே நிற்காமல் துருவங்கள் மேலும் மேலுங் குளிர்ச்சியுறவே, ஆண்டு உறைந்து வதிய வசதியற்றவர்களாய்த் தெற்குநோக்கி மீண்டுந் திரும்பிவந்தனர். இக் கொள்கையே அறிவியலில் எத்துறைக்கும் ஒத்த தொன்றாகவும் முரண்படாததாகவும் இருக்கிறது. இக்கொள்கை யொப்புக்கொள்ளப்படுமேல், தற்போது ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும் ஏனைய கொள்கைகளை அதனுடன் பொருத்திக் காட்டுவது எளிதாகும். மொழிநூலறிஞர்கள் உலகப் பரப்பில் பற்பல பகுதிகளில் வழங்கும் பூஸ்து (Phustue) துருக்கியமொழி, ஹங்கேரியமொழி முதலியவைகள் அமைப்பில் "திராவிட" மொழிகளை யொத்திருப்பதாக ஒத்துக்கொள்கின்றனர். ஆங்கிலோ சாக்ஸன் என்று சொல்லப்படும் பண்டைய ஆங்கிலமொழியிலுள்ள சொற்களில் ஏறக்குறைய நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்ட சொற்கள் திராவிடமொழிகளின் தாதுக்களையே யுடையன; அஸ்ஸிரியாவில் காணப்படும் சில கல்வெட்டுக்களில் திராவிடமொழிச் சொற்கள் கலந்திருப்பதும் இக்கொள்கையை வலியுறுத்தும்.

உடற்கூற்று நூற்படி நோக்கினும், இந்திய ஐரோப்பியப் பெருங்குழுவினர்க் குரியதாக வரையறுத்துள்ள தலையமைப்பு இந்தியாவின் மற்றப்பகுதிகளில்லாமல் தென்னிந்தியப்பகுதியில் மட்டுமே பரக்கக்காணப்படுகிறது. வங்காளத்திலும் இந்தியாவின் வட கீழ்ப்பகுதியிலும் மங்கோலியக்குழுவினரின் தலையமைப்பும், வடமேற்குப்பகுதியில் செமிட்டிக் குழுவினரின் தலையமைப்புமே

காணப்படுகின்றன. தென்னிந்தியத் திராவிடக் குழுவினர் கருநிறம் படைத்திருத்தல் மிகுந்த வெப்பத்தினாலேயேயன்றி வேறன்று. மற்றவகைகளில் அவர்களுக்கும் இந்திய ஐரோப்பியப் பெருங்குழுவினர்க்கும் பெரும்பான்மையான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. (தொடரும்.)

மேற்கோள்களும் அவற்றை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் முறையும்

[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளையவர்கள், B. A.]

(முன் ௩௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

அருள்நூல்களை ஓதுகிறவர்கள் இந்த முறைமையைப் பின்பற்றி அவைகளிற் கூறப்பட்டிருக்கிற கருத்துக்களை அறியாவிட்டால் அவர்கள் அறிகிற கருத்துக்களெல்லாம் உதடு முதலிய உறுப்புக்களாற் கூறப்படுகிற சொல் உருவங்களாயிருக்குமன்றி அச்சொல் உருவங்களுக்கு வேறாய் அவைகளாற் கூறப்படுகிற உண்மைகளாக அவர்களது உள்ளத்தில் விளங்கிப் பயன் செய்யா.

அருள்நூல் உண்மைகள் உள்ளத்தில் வைத்து அறியப்படுகின்றன. மாந்தர் உயிருக்கு அறியும் கருவியாக அமைந்திருக்கிற உள்ளமானது வஞ்சனை பொறாமை வெகுளி காமம் செருக்கு பகைமை முதலிய குற்றங்களினின்று எத்துணை நீங்கியிருக்குமோ அத்துணை அவ்வுண்மைகள் உள்ளத்தில் வைத்துத் தெளிவாய் அறியப்படும். அதுவுமல்லாமல் உள்ளமானது யாதாமொரு கருத்தை முடிவாகப் பற்றிக்கொண்டிராமல் பின் கிடைக்கப்பெறும் மேலான காரணமொன்றுடன் பொருந்த வைத்து அறியும்பொழுது அதனை மாற்றும் பாங்கினை உடையதாயு மிருத்தல் வேண்டும். உயிர் ஒன்றனைச் சார்தலும் சார்ந்த வண்ணமாதலும் ஆகிய இயற்கை உடையது. ஆதலின் அது எத்தகைய உள்ளத்தைச் சார்ந்து அறியுமோ அந்த உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தே அது அறியும் உண்மைகளு மிருக்கும் என்பது தெளிவு. உயிரின் இயற்கைத் தன்மை இன்னது என நன்கு அறிந்த அறிஞர்கள் தாங்கள் அறிகிறபடி சைவ சித்தாந்த உண்மைகளாயிருப்பவை சில, பிறர் அவர்கள் அறிகிறபடி வெளியிட்

டிருக்கிற கருத்துக்களுக்கு மாறுபாடு உடையனவா யிருப்பன வாக அறிந்தால் அக்கருத்துக்களை தங்கள் கருத்துக்களுடன் உள்ளத்தில் வைத்து ஒத்துப் பார்த்து ஆராய்ந்து சரியான காரண மிருப்பின் தங்கள் கருத்துக்களை மாற்றியும் திருத்தியும், மாற்று தற்கு காரண மில்லாதிருப்பின் பிறர் கொண்ட கருத்துக்கள் இன்ன காரணங்களினல் பொருந்தா என்றும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்வர். இதுவல்லாமல் தாங்கள் கூறின கருத்துக்களே அருட்பெரியார் கூறுகிற கருத்துக்கள் என்றும் பிறர் கூறும் கருத்துக்கள் உண்மை அல்லன என்றும் சாதித்துப் பிறரை இகழ்ந்து பேசார். கருவி அறிவைத் துணைக்கொண்டு உண்மைகளைப் பகுதிப்பட அறியும் அறிஞர் எந்த உண்மைகளையும் அறியும் முறைமை இதுவே. இந்த முறைமையை நமது நாட்டுத் தமிழ்ப் புலவர்களும் வடமொழிப் புலவர்களும் மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சி யுடையவர்களிடமிருந்து அறியுந் தன்மை உடையவர்களாயிருக்கிறார்கள். அருள்நூற் பாட்டுக்கள், அவைகளை ஓதுகிறவர்கள் குருட்டுப் பாடமாக மாத்திரம் வாயினுற் கூறுது அறிவிலுய்த்து ஆராய்ந்து பலகாற் சிந்தித்து உளங் கொள்ளுதலினுலேயே அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கும். கருவி அறிவுடைய ஒருவர் எத்துணை நுணுகி அறியும் கூர்த்த மதியினராயிருப்பினும் சுட்டறிவுக்குரிய குறைபாடுகள் அவரை விட்டு முற்றிலும் நீங்கா. ஓர் எல்லை வரையும் கூர்த்த கருவி அறிவு மக்களுக்குப் பயன்படுமேயன்றி அவ்வெல்லைக்கு மேலே அருள் அறிவே அவர்களுக்குப் பயன்படத் தக்கது. இக்கருத்துப்பற்றி திருஞானசம்பந்த அடிகள்,

"ஏதுக்களாலு மெடுத்தமொழி யாலுமிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி"

என்று கூறியருளினர். மேலானசமய உண்மைகளைக் குறைபாடின்றி அறிதற்குக் கருவி அறிவு துணையாகமாட்டாது. இறைவனெடு இரண்டறக் கலந்து உணரும் அருள் அறிவினுலேயே அவைகள் குறைபாடின்றி உணரப்படும்.

5. இனி இரண்டாவது வகை மேற்கோள்களைப் பற்றி ஆராய்வாம். முதலாவது வகை மேற்கோள்கள் மலம் நீங்கி விளங்கிய அறிவின் அருட்பெரியார்கள் கூறிய நிறை மொழி மாற்றங்கள் ஆதலின் அவைகளிற் கூறப்படும் உண்மைகளையும் கருத்துக்

களையும் நமது அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளுதலில் அவைகளை நாம் அறியுந் தன்மையில் மட்டும் தடையிருக்கிறதாக நாம் மேலே கண்டோம். இரண்டாவது வகை மேற்கோள்களிலோ ஆசிரியர்களாற் கூறப்படும் மேற்கோள்களை முடிவுகளாகக் கொள்ளுதல், அம்மேற்கோள்களை அறிதல் ஆகிய இரு வழிகளிலும் அவைகளை நமது அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளுதலிலே தடையுள்ளன. அத்தடைகளைக் கூடிய வரை விலக்கி அவைகளை நமது அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வது கற்றுக் கேட்டு அறிந்த அறிஞர் கடனாகும். தடையை நீக்கிப் பயன்படுத்திக்கொள்ளுதற்கு முதலாவது மேற்கோள்களைக் கூறும் ஆசிரியர்கள் எத்தகைய அறிவுத் திறனுடையவர்களாயிருத்தல் வேண்டுமென்பதை நாம் கருதல் வேண்டும். பண்டைக் காலத்திலும் பிற்காலத்திலும் தமிழ் இலக்கண இலக்கியப் புலவர்களால் எழுதப்பட்ட நூல்களையும், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர் உரை நூல்களையும் நாம் பொதுவாக மேற்கோள்களாகக் கொள்ளலாம். பண்டைக் காலத்தில் நூல்கள் பனை ஓலைகளிலெழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகளாயிருந்தன. யாதாமொரு நூலைக் கற்க விரும்புகிறவர் அவ்வேட்டு நூலை முன் கற்றுக் கேட்டறிந்த ஒரு புலவரிடம் போய் அந்நூலை வாங்கித் தங்கள் கைப்பட பனை ஏடுகளிலெழுதியும் எழுதிக் கற்ற நூலின் பொருளை முன் கற்றுக் கேட்டு அறிந்த புலவரிடம் கேட்டும் கேட்ட பொருளைப் பலகாற் சிந்தித்து ஆராய்ந்தும் அறிந்து வந்தார்கள். அம்முறைமையானது கற்போர் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதாயிருந்தது. அச்சு நூல்கள் மலிந்திருக்கும் இக்காலத்தில் நூல்களைக் கற்கிற மாணவர் அவைகளைத் தாங்களாக ஏடுகளிலாவது தாள்களிலாவது எழுத வேண்டியதில்லையென்றாலும் நூல்களை முன் கற்றுக் கேட்டு ஆராய்ந்து ஐயந்திரிபுகளறத் தெளிந்தாரிடம் பாடம் கேட்டு வரும் முறைமை இக்காலத்திலும் அறிஞர்களாற் போற்றத் தக்கதாகும். ஆயினும் மேற்கோள்களைக் கூறும் ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும் அவர் இந்த முறைமையைக் கையாண்டு கற்றிருக்கிறாரா என்று பார்த்தல் முடியாததாகும். தமிழ்மொழி ஆசிரியர்கள் பண்டைத் தமிழ் இலக்கிய நூல்கள் தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்கள் சைவ சமய நூல்கள் வைணவ சமய நூல்கள் கற்றுத் தேர்ந்தவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஆங்கிலக் கல்வியிலும்

வடமொழிக் கல்வியிலும் அல்லது யாதாமொரு மொழிக் கல்வியி லாவது தேர்ச்சியுள்ளவர்களா யிருத்தல் மிக்க நலமா யிருக்கும். ஆங்கிலத்தில் பீ.ஏ., எம்.ஏ. தேர்வுகள் தேறினவர்களா யிருக்கிற வர்கள் தமிழ்மொழிக் கல்வியிலாவது பயின்றிருத்தல் வேண்டும். அவர்கள் கூடியவரை யாதாமொரு சாதிப் பற்று சமயப் பற்று யாதாமொரு கொள்கைப் பற்று உடையவர்களா யிராமல், காய் தல் உவத்தலின்றி உண்மையினை அறிய விருப்பும் மனப்பான்மை உடையவர்களா யிருத்தல்வேண்டும். இதுவன்றி அவர்கள் எந்த எந்தத் துறையில் நூல் எழுதுகிறார்களோ அந்த அந்தத் துறையில் கல்வியைத் துறைபோகக் கற்றுச் சிறந்த அறிவுடையவர்களா யிருத்தல்வேண்டும். மேலே கூறப்பட்ட தேர்ச்சிக் குறைவான அறிவுத் திறனுடையவர்கள் தமிழ் உலகுக்கு மேற்கோள் ஆசிரி யர் பதவிக்குத் தகுதி யுடையவர் ஆகார். இத்தகைய வரையறை இல்லாவிட்டால் தங்களுக்கு வரும் பொருட்பேறு ஒன்றனையே விரும்பிச் சிறிது கல்வித் திறனுடையவர்களும் இக்காலத்தில் செய்து வருகிறபடி நூல்கள் எழுதியும் பத்திரிகைகள் வெளியிட்டும் நமது நாட்டு மக்களுக்குள் சமயப் பகைமை சாதிப் பகைமை வகுப் புப் பகைமை குறுகிய அறிவீனக் கொள்கைகள் இழிசுவை (Vulgar taste) முதலிய் கேடுகள் பரவவொட்டாமற் றடுப்பது முடியாத தொன்றாகும். கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தற்கு ஏற்பட்டிருக்கிற கழகத் தார் (Text Book Committee) நூல் செய்தவருடைய விருப்பு வெறுப்புக்களை நோக்காது அறிவு வளர்ச்சிப் பொதுநல மொன் றனையே கருதி இப்பேர்ப்பட்ட குறைபாடுகளை உடைய நூல்களை பாடங்களாகத் தெரிந்தெடாதிருத்தல் நமது நாட்டு மொழிகளின் வளர்ச்சிக்கும் நல்லறிவு வளர்ச்சிக்கும் செய்கிற கடனாகும். மேலே கூறப்பட்ட தகுதியையுடைய ஆசிரியர்களுடைய மேற்கோள்களை அறிவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளுதலில் முதலாவது வகை மேற்கோள்களுக்குக் கூறப்பட்ட முறைமையைப் பொருந்துமாறு பின்பற்றல் வேண்டும்.

மேற்கோள்கள் முதலாவது வகையைச் சேர்ந்தவையாயிருப் பினும் அவைகளைக் கற்றுத் தங்கள் அறிவு வளர்ச்சிக்குப் பயன் படுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் அம்மேற்கோள் நூலை அல் லது நூலினொரு பகுதியைக் கற்றபின் தாங்களாகத் தங்கள் அறி வில் உய்த்தும் தங்களைப் போன்று கற்கிறவர்களை உசாவியும் பல காற் சிந்தித்தும் சிந்தித்தலாலெழும் ஐயந்திரிபுகளைத் தெளிந்தார் பாற் கேட்டு நீக்கியும் நீக்கினபின்னும் எவ்வாறு உண்மைகள் அறிவுக்குப் பொருத்தமாயிருக்கின்றன என்று பலகாற் சிந்தித் தும் தெளிதல் வேண்டும். இவ்வாறு அவர்கள் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளியாவிட்டால் தாங்கள் நூலிற் கற்ற உண்மைகள்

தங்கள் அறிவிற் பொருந்திய உண்மைகளாகா. ஒருவன் உண்ட உணவு செரித்தபின் செந்நீராக மாறியும் வெண்ணீராக மாறியும் உடலோடு வேற்றுமையின்றிச் சேர்தல்போல ஒருவன் கற்ற கருத்துக்கள் உயிர் அறிவோடு கலந்து உண்மைகளாக மாறுதற்கு மேலே கூறப்பட்ட முறைமையை அவன் பின்பற்றல் வேண்டும். செரிக்காத உணவு உடல்நலத்துக்குக் கேடு விளைத்தல்போல அறிவில் உய்த்து நன்கு அறிந்து கொள்ளப்படாத கருத்துக்கள் உயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய அறிவு வளர்ச்சியைக் குன்றச் செய்யும். அறிவு வளர்ச்சியோடு கூடிய உயிர் வளர்ச்சியே உலக வாழ்வின் பயனாயிருத்தலால் இந்த நற் பயனை அடைதற்கு அறிஞர் மேலே கண்டவாறு மேற்கோள்களைக் கையாளல் வேண்டும்.

மதிப்புரை

பாரத சக்தி:—புதுவை உயர்திரு. சுத்தானந்த பாரதியார் இயற்றியது. பாரத சச்தி நிலயம், புதுச்சேரி என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளவும். விலை ரூ. 1—8—0

உலகெல்லாம் அருட்பெருங் கோயில். எல்லாவுடலும் இறைவனாலயம். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள இத்தகைய அருட்கலப்பினால் மக்கட்டொகுதி சாந்தம், சிவம், சுந்தரம், மங்களம், ஸத்ய தர்மம் துலங்கும் தேவரினமாகவேண்டும். இதை இயலுவிக்கும் அத்யாத்ம சத்தியே **பாரத சக்தி**. இந்த உன்னத நிலை பூரணயோக சித்தியால் எய்தும். இத்தகையதோர் சக்தி, புத்தர், மகாவீரர், ஏசுநாதர், முகம்மது நபி, குரு கோவிந்தர், பிரதாப சிங்கன், சிவாஜி முதலிய ஞான வீரர் கர்ம வீரர் வரலாற்றுகளைக் கருவியாகக் கொண்டு இனிய இளந் தமிழில் விரிவாக விளக்கப்பட்டுளது. இஃது சிறந்த அனுபவக் காட்சி விரிவுரையாகத் திகழ்கிறது. மனிதனைக் கடவுணிலைக்கு உயர்த்த வழி காட்டி நடத்தும் நல்லொளி இந்நூலேயாகும்.

புதுயுகப் பாட்டு.—புதுவை, உயர்திரு. சுத்தானந்த பாரதியார் இயற்றியது. புதுவை பாரத சக்தி நிலயத்திற் கிடைக்கும்.

விலை அணா 5.

தமிழ் செம்பொருட் கலைக்கடல்; அக்கடலில் பொன்னும் பசுமையும் துலங்கும் புதுயுகத் தீவொன்று அகண்டமாக எழுந்து அதன்கண் அழகும் அன்பும் அருளும் உண்மையும் சுத்தமும் சுதந்திரமும் சமத்துவமும் பேரின்பமும் ஆன்ம சக்தியும் இரஸலீலை புரிகின்றன. அவற்றின் அலை மோதும் இசைத்திரளின் இன்பச் சிலிர்ப்பே பொருளாகக்கொண்டு மலர்ந்தது புதுயுகம் என்று தமிழ் மக்களை யறைகூவி யழைக்கும் இவ்வழகிய சிறு நூல் வீரந் ததும்பும் ஒவ்வொரு தமிழரின் கைகளிலுமிருந்து அணி செய்வதாகும்.

—கா. சிவ. க.

அறிவியற் பகுதி — Science

குரங்குகளின் பண்புநலங்கள்

[திருநிறை. மிஸ். பி. இராபர்ட்ஸ், எம்., ஏ.]

அறிவியற்படி குரங்குகள் சிறுகுரங்கு வகை (Lower Monkeys) பெருங் குரங்கு வகை (Higher Monkeys) என இரு வகைப்படும். பெருங் குரங்குகள் தாம் படைத்துள்ள அறிவு மிகுதியால் ஏனைய மிருகங்களைவிட உயர்ந்த நிலையிலிருக்கின்றனவென்பது மனித வகுப்பைச் சேர்ந்த நாம் வியக்கத்தக்க காரியமேயாம்.

பற்பல செய்கைகளுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏதுவாயுள்ள ஐம்புலன்களைச் சற்று கவனிப்போம். குரங்குகள் மற்ற மிருகங்களைப் போல் ஓரம் சாய்ந்து பார்ப்பதில்லை. குரங்குகளின் கண்கள் மனிதர் கண்களைப்போல் நேர்பார்வை யுடையன. இதனால் அவைகள் எப்பொருளையும் நன்றாய்ப் பார்க்கலாம்; பற்பல வடிவங்களையும், அச்செழுத்துக்களையும், பற்பல நிறங்களையும் சரிவரத் தெரிந்து கொள்ளலாம். அவற்றின் செவிகள் மிகக் கூர்மையானவை; ஆனால் மோப்பப் புலன் மனிதரின் மோப்பப் புலனைப் போல் அவ்வளவு வியக்கக்கூடிய தன்று.

குரங்குகளுக்கும் மற்ற மிருகங்களுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால், மிக எளிதாய்த் தங்கள் கைகளைப் பயன்படுத்தும் தன்மையே யாம். இக்கைகள் பூமியின் மேல் நடக்கும்படியாக வழங்கப்பட்டாலும் முக்கியமாய்ப் பொருட்களைப் பற்றிப் பிடிக்கவும், தூக்கி யெடுக்கவும், ஏந்திப் பிடிக்கவும் தகுதியான உணர்ச்சி உறுப்புகளாக யிருக்கின்றன. அணில்களும் மற்றும் சில மிருகங்களும் தங்கள் முன்னங்கால்களை இவ்விதமாகப் பயன்படுத்துவதை நாம் பார்க்கிறோம். ஆனால் குரங்குகளே மற்றெல்லா மிருகங்களைவிடக் கைகளால் வேலை செய்வதில் சிறந்து விளங்குகின்றன; தங்கள் கைகளைக் கருவிகள்போலப் பயன்படுத்துகின்றன.

இவ்விதமாகக் கைவேலையில் சிறந்து விளங்குவதற்கு அவைகளின் கூர்மையான புத்தியே காரணம், நாம் அவற்றின் கண்

களைப் பார்த்தால்; அவற்றின் மனத்தில் பற்பல எண்ணங்களும் நினைவுகளும் உண்டாகின்றன வென்று தெரிந்துகொள்ளலாம். அவ்வெண்ணங்களுக் கேற்றவாறு குரங்குகள் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் அலைகின்றன. ஓய்வில்லாமல் ஏதாவது ஒரு செய்கையைச் செய்துகொண்டே யிருப்பதற்கு அவைகளின் கூர்மையான புத்தியே காரணம்.

குரங்குகள் மனத்தில் தோன்றிய எண்ணங்களை உடனுக்குடன் செய்கைகளிற் காண்பிக்கின்றன. ஒரு அரவம் கேட்டவுடனே அதற்கேற்ற செயலை மிக விரைவாய்ச் செய்து முடித்துவிடுகின்றன. இலண்டன் விலங்கினக் காட்சி சாலையில் 'சாலி' என்று பெயர்கொண்ட ஒரு பெரிய வாலில்லாக் குரங்கு (Chimpanzee) வளர்க்கப்பட்டது. அது தன் உபாத்தியாயர் கூறும் எண்ணின்படி குச்சிகள் எடுத்துக் கொடுக்கும்படியாகப் பழக்கப்பட்டது. இவ்விதமாய், ஐந்தாவது எண் வரையில் கற்பிக்கப்பட்டதாம்.

இன்னும், குரங்குகள் சிக்குப் பெட்டியைச் (Puzzle box) சரியான ஒழுங்கில் அடுக்க மிகச் சுலபமாய்க் கற்றுகொள்ளுகின்றன. இவ்விதமாக அடுக்கும் வழியைக் கற்றுக்கொண்ட ஒரு குரங்கானது எட்டு மாதத்திற்குப் பிற்பாடு ஒரு சிக்குப் பெட்டியை வெகு சீக்கிரத்தில் அடுக்கிவிட்டதாம்; இதற்கு அதனுடைய கைப்பழக்கமே காரணம். முதலில் பல தடவை தவறினாலும் அதை மறுபடியும் பலமுறை செய்து சரியாய் அடுக்கும் வழியைக் குரங்குகள் தெரிந்து கொள்ளுகின்றன.

புகழ்பெற்ற மற்றொரு வாலில்லா வானரம், ஈருருளி (bicycle) ஓட்டவும், ஊசி கோக்கவும், முடிகளை அவிழ்க்கவும் பாசி, பவழம் முதலியவற்றைக் கோக்கவும், ஆணிகள் அறையவும், பூட்டைத் திறக்கவும் படித்திருக்கிறது. ஒரு சமயம், எட்டு என்னும் எண்ணைக் கீழே வரைந்து அதன்மேல் ஐந்து புட்டிகளை நிறுத்தி யிருந்ததாம். அவ்வானரம் அதை உள்ளும் புறமுமாகச் சுற்றிச் சுற்றி ஈருருளியில் மிக வழகாக வந்ததாம். இவ்வற்புதத்தைக் கண்டவர்கள் இறும்பூதெய்தார்களோ? சாதாரண ஆணிகளையும், திருகு ஆணிகளையும், சுத்தியையும், திருப்புளியையும் அவ்வானரத்திடம் கொடுத்தபொழுது, ஆணிகளைப் பயன்படுத்தும்பொழுது சுத்தியையும், திருகு ஆணிகளை உபயோகப்

படுத்தும்பொழுது திருப்புளியையும் ஒழுங்காக உபயோகித்ததாம். வேறுவிதமாகச் செய்யப்பட்ட ஒரு சுத்தி அதன் கையில் கொடுக்கப்பட்டபொழுது அது சுத்தியின் இருபாகத்தையும் தொட்டுப் பார்த்துத் தட்டையான பாகத்தால் ஆணி அறைந்ததாம். இவ்வாறு சுமார் முப்பத்தாறு வித்தைகளை எவருடைய தூண்டுதலுமில்லாமல் வரிசையாகச் செய்து காட்டியதாம்.

இது நிற்க, குரங்குகளுக்கு மனிதனைப்போல் பகுத்தறியும் தன்மை (Power to reason) இருக்கிறதா என்று சற்றுக் கவனிப்போம். ஏனைய மிருகங்கள் அதாவது, குதிரை, நாய், பூனை, யானை இவைகளைப்போல், குரங்குகளும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளைக் காண்பிக்கின்றன. இன்ன செய்கையைச் செய்தால் இன்ன பயன் கிடைக்குமென்று அவை தங்கள் மனத்தில் எண்ணிச் செய்கைகளைச் செய்வதுபோல் நமக்குத் தோன்றுகின்றது.

குரங்குகளுக்குப் புத்தி கூர்மை அதிகம் என்பதைத் திட்டமாகக் காண்பிக்கும் பொருட்டு அனேக இயற்கை நூலறிஞர்கள், குரங்குகளை வளர்த்துப் பற்பல தொழில்களும் பாடங்களும் கற்றுக்கொடுத்து அவைகள் எவ்வாறு புத்தி கூர்மையைக் காண்பிக்கின்றன வென்று ஆராய்ந்து வருகின்றனர். ஒரு மனிதக் குரங்கு (Gorilla) அநேக நாட்களாய் இருட்டிலே வளர்க்கப்பட்டது; அப்பால் வெளிச்சத்தில் கொண்டுவரப்பட்டது. அதி சீக்கிரத்தில் அது சுத்தமாயிருக்கக் கற்றுக்கொண்டது; புதிதான பழங்களையும் சூடான பாலையும் சாப்பிட வழக்கப்படுத்திக் கொண்டது. மேசைமீது சாப்பிடும்போதும் தன் எஜமானியோடு உட்காரும்போதும், மரியாதையாய் அது நடந்து கொள்ளும். தண்ணீர்க் குழாயைத் திறந்து தண்ணீர் குடித்தால் அதைத் திரும்பவும் மூடிவிட்டுத்தான் தன் இடத்திற்குப் போகும். தானாகவாவது, அல்லது சிறு பிள்ளைகளோடு சேர்ந்தாவது வெகு சந்தோஷமாய் விளையாடும். தான் நேசிக்கும் நண்பரிடம் அதிக பயபக்தியோடு நடந்துகொள்ளும். அது ஏதாவது சிறுபிழை செய்துவிட்டால் அதற்குப் பெரிய தண்டனை கொடுக்க அவசியமில்லை. "நீ அதிகக் கெட்ட பிள்ளை, தூரப்போ" என்று தள்ளுவதே போதும்: உடனே கீழே விழுந்து, புரண்டு, அழுது தன் எஜமானியின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்குமாப்போல் காண்பிக்கும்.

(தொடரும்)

பொருணூல்—(Economics)

[திரு. B. நடராஜ பிள்ளை B.A. (Hons)]

(முன் ௫௨௯-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறாக, குறைந்தது ஆயிரமாண்டுகளாக மாறாதுநின்ற இந்திய ஏற்றுமதி வாணிபத்தின் தன்மை ஒரு பெரும் தலைகீழ் மாறுதலடைந்து, அளவிலும், விலையிலும் சிறிது பொழுது அருகி விட்டது. 1800-ம் ஆண்டிற்குப் பிறகு பருத்தித்துணி ஏற்று மதி குறைவதாயிற்று; ஆனால் 1820-க்குப்பிறகு அதன் வீழ்ச்சி யின் வேகம் மிக மிக விரைவடைந்தது. 18-ம் நூற்றாண்டில் இங்கி லாந்துக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த பருத்தித் துணியின் தொகை சராசரி 20 லட்சம் பவுனாக இருந்தது; ஆனால் 1820-முதல் 1830-வரை பத்தாண்டுகளில் சராசரி ஏற்றுமதி 5லட் சம் பவுனளவாகி, அடுத்த பத்தாண்டுகளில் சராசரி ஏற்றுமதி 3 லட்சம் பவுனளவாகக் குறுகிவிட்டது. 1833-ல் நிறுவப்பட்ட சார்ட்டர் சட்டத் (Charter Act) தின் பயனாக ஆங்கிலத் துணி கள் இந்தியாவுள் ஏராளமாக இறக்குமதி செய்யப்படுவதாயிற்று. அதற்குப்பின்னர் இந்தியப் பருத்தித்துணி ஏற்றுமதி விரைவில் அழிந்தொழிந்தது.

கிழக்கு இந்தியக் கம்பெனியார் வர்த்தகம் நடத்திவந்த காலம் வரையில் இந்தியத் தொழிலுக்கு ஒருவித ஊக்கம் இருந்து வந்தது. ஏனெனில் அவர்கள் உள்நாட்டிற் பல நெசவுத் தொழிலாளர்களை ஏற்படுத்தி ஆண்டுதோறும் ஏற்றுமதிக்கெனச் சரக்குகள் உற்பத்தி செய்துவந்தனர். ஆனால் மேற்குறித்த சட்டத்தின் பயனாகக் கம் பெனியாரின் வாணிப உரிமைகள் பறிக்கப்படவே அச்சிறு முயற்சியும் நின்று போயிற்று. பிற்காலத்தில் சில முக்கிய விளை பொருள்களில் ஏற்றுமதி வாணிபம் விரிந்ததே எனினும், அதன் பயனாக இந்திய வாணிபப் பண்டங்களின் தன்மையும், அவை சென்று சேர்ந்த திசைகளும் வேறாகி மாறுதலடைந்தன. இக்கார ணத்தாலும், வேறுகாரணங்களாலும், சில காலத்துக் கெல்லாம் இந்தியாவுக்குள் வந்த தங்கம் வெள்ளி முதலிய அரிய உலோகங் களின் இறக்குமதி குன்றியதுமேயன்றி, சிற்சில மாகாணங்களி லிருந்து நாணய ஏற்றுமதியானது இறக்குமதியிலும் கவிந்து பட்டது. இவணிருந்து நிதி ஏற்றுமதியை எளிதாகக்கருதி ஆங்கில

அரசாங்கத்தார் சில சௌகரியங்களும் கம்பெனியாருக்குச் செய்து வைத்தனர். கம்பெனியின் ஏற்றுமதி, பொன் வெள்ளியாக இருப்பின் அதற்கு ஆங்கில அரசாங்கக் கப்பல்களில் மேற்படி அரசாங்கத்துக்கு எவ்வளவு பளுக்கூலியோ அவ்வளவே கம்பெனியார் நிதிக்குமென விதித்தனர்.

ஆனால் எக்காலத்தில் எவ்வளவு இறக்குமதியாயிற்று என்பதைப்பற்றிய புள்ளிவிவரங்கள் ஒழுங்காக இல்லாமை வருந்தத் தக்கதே சிற்சில ஆசிரியர்கள் குறிக்கும் புள்ளிகள் அநுமானத்தை அடிப்படையாகக் கொண்டனவே. எங்ஙனமாயினும், இறக்குமதியினும் நிதியின் ஏற்றுமதியே மிகுந்திருந்தது என்பதைமட்டும் முடிவுகட்டப் போதிய சான்றுகள் உள. ஸர் ஜார்ஜ் வின்கேட் என்பவர் 1800 முதல் 1858 வரையில் இந்தியாவை விட்டு அகன்ற நிதிக்குவையின் தொகை 10 கோடிப் பவுனென்று மதித்திருக்கிறார். மான்ட்கோமரி மார்ட்டின் என்பவர் வட்டிக்கு வட்டிக் கணக்கிட்டு 1800 முதல் 1830 வரையில் வெளிச்சென்ற பொன், வெள்ளியின் தொகை 70 கோடிப் பவுனளவாவதாக மதிப்பிட்டார். ஜான்ஷோர் என்பவரும், எம். இ. கிராண்டு என்பவரும் புள்ளி விவரங்கள் தந்திலரேனும், வெளியேறிய தொகை மிகப் பெரியதெனவே நிறுவுகின்றனர். ஹாமில்டன், டாடுவல் எனும் ஆசிரியர்கள் இத்தொகைகள் உண்மையை மிகைபட உரைப்பதெனக் கொள்ளினும், தாமேதும் மாறுபட்ட புள்ளிவிவரங்கள் தந்திலர். ஹாமில்டன் என்பவர்தான் இத்தொகையின் பெருக்கைப்பற்றி மிகுந்த சந்தேகம் கொள்பவர். டாட்வல் என்பவரோ பொதுமக்கள் கருத்திற் கேற்ப ஷோர், கிராண்டு ஆகியோர், கொண்டுள்ள நம்பிக்கையை ஹாமில்டன் என்பவர் தகுந்தபடி ஆராய்ந்துளாரோ' என்று ஐயுறுகின்றார்.

௬. பணத்தின் தொகை குறைதல்

சென்னையின் சிறப்புக் காரணம்

1820-முதல் 1854 வரைச் சென்னைமாகாணத்திலிருந்த பொருளாதார நிலையானது மேலே குறிக்கப்பட்ட இந்திய வாணிபத்தின் மாறுதல்களையும் நிதிப்போக்கின் நெறியினையும் பற்றிய பொதுக் கருத்துக்களைப் பெரிதும் வலியுறுத்துகின்றது; என், இன்னும் அதிகமாகவே அரண் செய்கின்றது. இம்மாகாணத்

திற்குச் சிறப்பா யிருந்த பற்பல காரணங்களால் பொன் வெள்ளி அயல்நாடுகளுக்கு ஏராளமாகப் போனதுவுமன்றி, மற்றை மாகாணங்களி லிருந்ததைவிட நீண்டகாலம் இந்த ஒழுக்கு இங்கே இருந்து வந்தது. சென்னைப் பத்திரக் கருவூலங்களைத் துருவியதன் பயனாக மேற்குறித்த கால அளவையில் இங்கு நிகழ்ந்த வாணிபத்தினையும் நிதிப்போக்கு வாவினையும் பற்றிய தக்க புள்ளி விவரங்கள் எமக்குக் கிடைத்துள்ளது. அவற்றிலிருந்து, 1825-ம் ஆண்டிலிருந்து வெளிநாடு நோக்கிச்செல்ல ஆரம்பித்த இந்தத் திரவிய ஒழுக்கானது, 1850-ம் ஆண்டுவரை ஒருவாறு ஓய்வின்றிப் போய்க்கொண்டே இருந்ததென்று காண்கிறோம்.

இந்தத் திரவியப் போக்கு அதிகரிக்கவும் மற்றப் பாகங்களினும் நீடித்து நிகழவும் காரணமா யிருந்த சிறப்பியல்களை இப்பொழுது ஆராய்வோம். முதலாவதாக நாம் எடுத்துக்கொண்ட கால அளவையில் சென்னை ஏற்றுமதி வியாபாரமானது பண்ட வகைகளிலும், சென்ற திசைப்போக்கிலும் பெரிய மாறுதலடைந்தது. 1830-ம் ஆண்டு வரை சென்னையின் ஏற்றுமதி வியாபாரத்தில் நெசவுப் பொருள் வகைகளே தலைமைகொண்டு நின்றன. இவை எந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தனவோ (மலாக்கா, சுமத்திரா, மணில்லா, பெகு, பெர்ஷியன் குடாக்கடல், அரேபியா முதலிய) அந்த நாடுகள் நமக்கு வழக்கமாகப் பொன்னாகவும் வெள்ளியாகவுமே நம் விலையைக் கொடுப்பதா யிருந்தன. இவையே சென்னை யரசாங்கப் பட்டசாலைக்குத் தேவையான பொன்னையும் வெள்ளியையும் ஒழுங்காக அனுப்பி வந்த நாடுகளாகும். ஆனால் சலுவான விலையுடைய பிரிட்டிஷ் நெசவுச் சாக்குகள் மேற்குறித்த நாடுகளில் இந்தியச் சாக்குகளோடு போட்டியிடவே, சென்னை ஏற்றுமதி வியாபாரம் விரைவில் வென்று அழிந்துபட்டது. பொன், வெள்ளியின் வரத்து நின்று போயிற்று. ஆனால் சீனா தேசத்தோடும், பிரிட்டானியா தேசத்தோடும் நம் ஏற்றுமதி வியாபாரம் மிகுந்ததெனினும், அதற்கு ஈடாக நமக்கு உரிய திரவியம் அனுப்பப்படவில்லை. இதற்கு இங்கிலாந்தி லிருந்த கீழவர்த்தகக் கம்பெனியாரின் தலைவர்கள் (Court of Directors) கையாடின 'பில்' முறையே ஓரளவில் பொறுப்பாகும்.

(தொடரும்)

அகத்தியர்

[சீகாழி திரு. கி. சாமிக்கண்ணு அவர்கள்]

அமிழ்தினும் இனிய நம் தாய்மொழியாகிய தமிழன்னை, என்று பிறந்தவள் என்று உணரா இயல்பினளாய், எந்நாளும் ஓர் கன்னிகையென்னப் பயின்று இந்நிலவுலகின்கண் நிலைத்து நின்று சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வருகின்ருள். நம் தமிழ்நங்கைக்குச் செவிலித்தாயாய் விளங்கியவர் அகத்தியர்.

அகத்தியர் ஓர் முனிவர். குறுமுனி, குடமுனி, மலயமுனி, முத்தமிழுரியோன், தமிழ்வளர்த்தோன் என்னும் சிறப்புப் பெயர்கள் படைத்துள்ள இவர் முனிவர்களுள் முதல்வர். முழு முதற் கடவுளிடத்தும், முருகனிடமும் செந்தமி ழினியல்புகளை ஐயம் திரிபு என்னும் குற்றம் அறத் தெரிந்துதெளிந்தவர் இவர் ஒருவரே. இவர் அவலோகித முனிவரிடம் தமிழ்கற்ருர் என்பாரும் உளர். ஆகவே இவர் முத்தமிழுரியோன் எனப் பட்டுளார்.

பாந்தோடிய காவிரியை, அரசிளங்குமாரைத் துணையாகக் கொண்டு ஒருமுகமாகத் திருப்பி நாடு வழியே பாயுமாறு விடு வித்தவரும் இவரே. பொதியமலையின் பாங்கருள்ள காடுகளை யெல்லாம் நாடாக்கினர். அவைகளே:—ஏழ்தெங்கநாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறும்பனை நாடு, குமரி, கொல்லம் முதலிய பன்மலைநாடு எனப்பட்டனவாம். இவைகளைத் திருத்திய பின் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் அந்தந்த நாடுதோறு மிருத்தி ஆசிரியநிலையில் விளங்கினுர். அப் போது இலங்கை நகரத்திலிருந்து இராக்கதர்கள் வந்து பற்பல துன்பம் செய்யமுயன்றனர். அதுகண்ட அகத்தியனுர், இரா வணனை இசையால் நட்புச்செய்து இராக்கதர் அந்நாட்டுக்கு வாாதிருக்குமாறு செய்வித்தனர். இதனுல் அகத்தியர் இரா வணனுடன் ஒத்தகாலத்தவர் என்பது தெரிகிறது.

முருகனை வழிபட்டுச் செந்தமிழின் இயல்புகளை உணர்ந்த பின் பொதியத்திலிருந்துகொண்டு தம்நாட்டுக்குரிய தமிழ் மொழி யையும் செம்மை செய்யக்கருதி "அகத்தியம்" என்னும் முதல்

நூலைச் செய்தனர். இந்நூல் முத்தமிழ் இலக்கணம். இஃது இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழ் இலக்கணத்தையும் பன்னீராயிரம் சூத்திரத்தால் தெரிவிப்பதாகிய இலக்கணநூல். இது நச்சினர்க்கினியர் காலத்திற்கு முன்பேயே இறந்ததென்ப. தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிறரும் ஆங்காங்குச் சிற்சில சூத்திரங்களை யெடுத்துக் காட்டியிருக்கின்றனர். அகத்தியர் நிமித்தம் மருத்துவம், ஞானம் முதலிய நூல்கள் பலவற்றைச் செய்தனர். இங்ஙனம் நூல்களையியற்றித் தொல்காப்பியர், செம்பூட் சேஎய், வையாபிகர், அதங்கோட்டாசான், அவிநயர், காக்கை பாடினியார், துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பாரனர், கழாரம்பர், நற்றத்தர், வாமனர் ஆகிய பன்னிருமாணுக்கருக்கும் கற்பித்தார். அதன் பின்னாய முதல் ஊழி இறுதிக்கண் (ஊழி—நெடுங்காலம்; ஊழி காலம்—நெடுங்காலம்; ஊழிநாள்—முடிவு நாள்.) தென் மதுரையகத்துத் தலைச்சங்கம் இரீஇயினர். அச்சங்கத்து இறையனரையும் முருகனையும் உடனிருக்க வேண்டி, முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவனர் என்றவருள்ளிட்ட நானூற்று நாற்பத்தொன்பதின்மர்கூட ஆராய்ந்து தம்நூல்களை அவையோர் கேட்டு ஒப்புக்கொள்ளச் செய்தார். சங்கத்தில் தலைமை பெற்றுச் சங்கம் நிறுவிய துங்காரய் விளங்கினர்.

அன்றியும், சங்கத்திருந்த மற்றையோர் எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் முதலிய நூல்களைச் செய்தனர். நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இத்தலைச்சங்கம் நின்று நிலவியது. இத்தலைச்சங்கம் இரீஇயினர் காய்சினவழுதிமுதல் கடுங்கோன் ஈறாயுள்ள பாண்டியர் எண் பத்தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியர். அவ்வெழுவருள் ஒருவனய நிலந்தருதிருவிற் பாண்டியன், தொல்காப்பியரைக் கொண்டு தொல்காப்பியம் புலப் படுத்து இரீஇயினன். நிலந்தருதிருவிற்பாண்டியன் காலத்துக்கு முற்பட்டவர், தொல்காப்பியருடைய ஆசிரியராகிய அகத்தியர்.

தமிழ்மொழியைச் செம்மைப்படுத்தி, நூல்பல செய்துதவி, சங்கங்கண்டு, அகத்தியர் தமிழ்வளர்த்தோன் என்ற சிறப்புப் பெயருக் குரியவரானர். "வேங்கடங்குமரி தீம்புனற் பௌவத்து" எனத்தொடங்கும் செய்யுளால் இவர் தலைச்சங்கம் நிறுவினர்

என்பதும் (சிலப்பதிகாரம்—செவ்வூர்ச் சிற்றம்பலக்கவிராயர் அவர்கள் வீட்டிலிருந்த ஒரு ஏட்டிலுள்ளது), அகத்தியம் இயற்றினூர் என்பதும் வலியுறுகின்றன.

"முத்தமிழ்மாமுனி நீள்வரையே நின்று மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு" என்பதிலிருந்து இவர் மலயம் என்ற பெயருடைய மலையில் நிலைத்திருந்தமையால் மலயமுனி எனப்பட்டார். பண்டைத்தமிழர்க்குரிய முறையில் இயற்கைக்கு மாறுபடாத இல்லறத்தை இனிதுநடத்தித் துறவறத்தைக் கைவரப் பெற்றவர். இவர் மனைவி பெயர் உலோபாமுத்திரை.

அகத்தியர் சங்கம் நிறுவியகாலமும், அகத்தியம் செய்த காலமும் தமிழ் பிறமொழிக்கலப்பின்றித் தனிநிலை பெற்றிருந்த காலம். தமிழர் இந்நாட்டுக் குடிகள் என்பதும், அவர்கள் எங்கிருந்தும் தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியவர் அல்லர் என்பதும் ஒருதலை ஆகலின் அகத்தியரும், சேரசோழபாண்டியரும் இந்நாட்டுப் பழங்குடிகள் என்பது திண்ணம்.

இசைநுணுக்கம் என்ற இசைநூல், இடைச்சங்ககாலத்து இயற்றப்பட்டது. இந்நூலியற்றியவர் சிகண்டிமுனிவர் என்பவர். இவர் அகத்தியருடைய மாணாக்கர் என்று அடியார்க்குநல்லார் கூறியிருக்கிறூர். இதனுல் இசைநுணுக்கம் இயற்றிய சிகண்டி-முனிவருக்கு ஆசிரியராகிய அகத்தியர் இடைச்சங்ககாலத்துக்கு முற்பட்டவர் என்பது போதரும்.

குடம் என்ற தமிழ்நாட்டின் பிரிவுகளுள் ஒன்றிலுள்ள பொதியமலைக்குக் குடமலை எனப்பெயர். (குடம்=தமிழ்நாட்டின் பிரிவுகளுள்ஒன்று. குடமலை=மேற்றிசைக் கணுள்ள ஓர் மலை, அது சையகிரி எனவும்படும்). அம்மலையில் வாழும் முனிவராதலின் குடமுனி எனப் பெயர் பெற்றூர். குடம் என்பதை மட்கலயம் எனப்பொருள்செய்து, அகத்தியர் மட்கலயத்துப் பிறந்தவர் என்ற வரலாறும் வழங்குகிறது.

இத்தலைச்சங்கம் குறித்த ஆண்டுகள் அளவும் நிலைபெற்று வருங்காலத்தில் அதற்கு இடமாயிருந்த தென்மதுரை கடல் கொள்ளப்பட்டது. இதுவன்றி மேற்காட்டிய நாற்பத்தொன்பது நாடுகளும் அழிபட்டன. இவ்வாறு ஊழிநீர் (ஊழிநீர்=உலக முடிவிலுண்டாகும் நீர்ப்பெருக்கு.) தோன்றிய காலத்தை ஆராயு

மிடத்துத் துவாபர கலியுக சந்தியாதல் வேண்டு மென்றும், எனவே இற்றைக்குப் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன் எனவும் கூறுநிற்பர். இக்கடல்கோள் தமிழ்நூல் பலவற்றாலும் பிறநாட்டினரின் குறிப்புக்களாலும் அறியக்கிடக்கின்றது. இற்றைக்குப் பதினோராயிரத்து நானூற்று எண்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு ஊழிநீர் வந்ததென்றும், அவ்வூழிநீரால் இப்பூமுகத்திலே ஆர்கலியாற் சூழப்பட்ட நாடுகளெல்லாம் சிதைந்தும் வேறுபட்டும் போயின என்றும், "போசிடோனிச்" முதலிய தீவுகள் கடல்வாய்ப்பட்டழிந்ததும் அவ்வூழி நீராலேயேயாம் என்றும் அத்திலாந்திக் வரலாறு எழுதிய எல்லியட் என்னும் ஆங்கிலப்புலவர் கூறியதும் இக்கடல்கோளை வலியுறுத்தும்.

இம்முனிவர் நகுடன் என்னும் அரசன் தேவேந்திரனிலை பெற்ற காலத்தில் அவன் சிவிகையை முற்றூங்கிச் சென்றாராக, அவன் விரைவாகச் செல்லுங்களென்று கூற, உடனே அவனை மலைப்பாம்பாகுமாறு வெகுண்டு கூறினர் என மகாபாரதம் கூறுவதிலிருந்தும், சீதாதேவியின் சிறைமீட்டற்காக இராமன் இலங்கைநோக்கி வரும் வழியில் இம்முனிவரின் இருக்கையிற் றங்கி இராவணன் வரலாற்று முறைமைகளையும், இலங்கையின் பெருமைகளையும் கேட்டுணர்ந்து அவராற் கொடுக்கப்பட்ட படைகளைக்கொண்டு, அவர் அருளையும் பெற்றுச் சென்று வெற்றியடைந்தான் என்று இராமாயணமும், கூர்மபுராணமும் கூறுவதிலிருந்தும் அகத்தியர் இராமனுடன் ஒத்தகாலத்தவர் என்பதும், மகாபாரதகாலத்துக்கு முற்பட்டவர் என்பதும் அறியக்கிடக்கின்றன.

இதுகாறும் கூறிவந்தவைகளால் அகத்தியர், இராமாயண காலத்திலிருந்தவர் என்றும், மகாபாரதகாலத்துக்கு முந்தியவர் என்றும், தலைச்சங்கம் இருந்த தென்மதுரை கடல்கொள்ளப் படுமுன் இருந்தவர் என்றும், இசைநுணுக்கம் இயற்றப்பட்ட இடைச்சங்ககாலத்துக்கு முந்தியவர் என்றும், நிலந்தருதிருவிற் பாண்டியனுக்கு முற்பட்டவர் என்றும், தலைச்சங்கம் நிறுவியவர் என்றும் ஏற்படும்.

எனவே அகத்தியர் இற்றைக்குப் பதின்மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தவர் என்பது தேற்றம்.

உடல்நலப் பகுதி

கடைச் சரக்குகளைப் பயன்படுத்தும் முறை

காசுக்கட்டி (Catechu)

("காசிகன்" எழுதுவது)

மருந்துக் கடைகளிலும் வெற்றிலைப்பாக்குக் கடைகளிலும் காசுக்கட்டி என்றதொரு பொருள் விற்கப்படுகிறது. அது நோய்க்கு மருந்தாகவும் பயன்படுகிறது. மருந்துக்கென்று எடுக்கப்படுங் காசுக்கட்டி சுத்தமானதாயும் கருநிறமுள்ளதாயும் எளிதில் உடையக் கூடியதாயும் இருத்தல்வேண்டும்.

காய்ச்சலில்லாமல் வயிற்றுப்போக்கு மட்டுங் கண்டால், நல்ல காசுக்கட்டியைப் பொடி செய்து ஒரு சிட்டிகையெடுத்துத் தேனிற் குழைத்தாவது, வெல்லத்திற் கலந்தாவது சிறிது கறுவாய்ப் பட்டைத்தூளுடன் சேர்த்துச் சாப்பிடலாம். இது வயதுவந்தவர்கள் சாப்பிடக் கூடிய அளவாகும்.

அன்றியும், இரண்டு ரூபாய் எடை காசுக்கட்டிப் பொடியையெடுத்து, கால் ரூபாய் எடைக்குச் சற்று அதிகமாகக் கறுவாய்ப் பட்டைத்தூளுடன் சேர்த்துக் கலந்து கொதிக்கிற நீரிற் போட்டு வைத்து இரண்டு மணி நேரங் கழிந்தபின் வடிகட்டி ஒரு புட்டியில் வைத்துக்கொண்டு வேளைக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் நாளைக்கு மூன்று வேளையாகக் கொடுத்தும் வரலாம். இரவில் படுக்கைக்குச் செல்லும்போது ஒரு அபின் மாத்திரையு முட்கொள்ளலாம். குழந்தைகளுக்கு மூன்று அல்லது நான்கு கிரைன் காசுக்கட்டித் தூளை அதன் சமனளவு கொண்ட கறுவாய்ப் பட்டைத் தூளுடன் கலந்து கொடுத்தால் நோய் தீரும்.

இரசங் கலந்த மருந்துகளை யுட்கொண்டதனுல் உண்டாகும் வாய்ப் புண்களுக்கும், உமிழ்நீர்ச் சுரப்பிற்கும் ஒரு துண்டு காசுக் கட்டியை வாயிற் போட்டு வைத்துக்கொள்ளுதல் நலம். ஒரு

நாளைக்கு இரண்டு மூன்று முறை இவ்வாறு போட்டுக் கொள்ள லாம். தொண்டையிலுண்டாகும் வலிக்கும் இது நலமளிக்கும்,

நாற்றம் மிகுந்த பழைய புண்களுக்குக் காசுக்கட்டியை மெழுகுப் பிளாஸ்திரியுடன் சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம். மேலும், இரண்டு ரூபாய் எடைக் காசுக்கட்டியைக் கொதிக்க வைத்த நீரை ஆறினபின் வடிகட்டிக்கொண்டு காலை மாலைகளில் கழுவியும் வரலாம். பால் கொடுக்குந் தாய்மார்களுக்குப் பாற்சுரை யில் காணும் புண்களுக்கும் இவ்வாறே செய்துவரலாம். இன்னும் பிள்ளையுண்டான எட்டாவது மாதத்தில் பாற்சுரையில் மேற் குறித்த காசுக் கட்டி நீரைத் தடவினல், பின்னர் புண் உண்டா காது.

பற்களிற் குழிவிழுந்து பின் அதற்குள் தசை வளர்வதனல் உண்டாகிற பல்வலிக்கு ஒரு துண்டு காசுக்கட்டியை குழிகளில் இட்டு அழுத்தினலும், வாயிலிட்டு ஒதுக்கிக்கொண்டாலும் நலங் கொடுக்கும்.

செய்திகளும் குறிப்புகளும் (News and Notes)

நமது செல்விக்குச் சிறந்த கட்டுரைகள் எழுதி வரும்திருவாளர் தி. பொ. மீனட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் தமையனர், திரு. தி. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள் காலஞ்சென்றமை யறிந்து மிக வும் வருந்துகிறேம்.

* * *

சென்னை யரசாங்கச் சட்ட மெம்பராக, திருவாளர் ஸர். கே. வேங்கட ரெட்டி நாயுடுகாரு, B.A., B.L. அமர்த்தப் பெற்றிருப்பது மிகவும் போற் றற்குரியதாகும்.

ஜனமித்திரன்

இஃது திரு. பி. எஸ். சுப்பிரமணிய ஐயரை ஆசிரியராகக் கொண்டு புதுக்கோட்டையினின்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழ மையும் வெளிவரும் வாரத் தாள். இதன் ஆண்டுக்கட்டணம் ரூ. 6, இதன்கண் உயர்திரு. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் பல துறைகளிலும் பாங்குற எழுதும் பற்பல கட்டுரைகளும், ஏனைய செய்திகளும் எழிலுற இலகுகின்றன.

உ

அறிவிப்பு

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு வேனில் விடுமுறைக் காலத்துக்கு மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது

அன்புள்ள ஐய,

தமிழின் தூய்மை வளர்ச்சி இன்ன கருதி, 1934 மார்ச்சு 30, 31, எப்ரல் 1-ம் நாட்களில் கூட்டப் பெறுவதாகக் குறிக்கப் பட்டிருந்த தமிழர் மாநாடு; பல தமிழ்ப் புலவர்கள் தமிழ்ப் பெரு மக்கள் நேரில் வந்து கலந்து பயன்பெறவேண்டி, உற்றுய்ந்து, 16-3-34-ல் கூடிய நிறைவேற்றக் கழகத்தாரால், 1934-ம் ஆண்டு மேமீ 18, 19 20-ம் நாட்களுக்கு மாற்றிவைக்கப்பட்டுள்ளது. இச் செய்தியைத் தமிழர்கள் அனைவரும் அறிந்து, மாநாடு பல் லாற்றானும் சிறப்புற நடைபெறுவதற்கு வேண்டுவன புரிய அன் புடன் வேண்டுகின்றோம்.

அன்புள்ள

திருநெல்வேலி 17—3—34. } பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.

அறிவிப்பு

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி. தனித் தமிழ்த் தேர்வுகள்.

தமிழ் அன்பர்காள்!

திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் ஆண்டு தோறும் சூன் மாதம் நடத்தி வரும் தனித் தமிழ்த் தேர்வுகள் நாளது 1109 ஆண்டுக்கு, 1934ஆடு ஜூன்மீ 28, 29, 30 க்குச் சரியான எகக ஆனித் திங்கள் ௰௫, ௰௬, ௰௭ வியாழன், வெள்ளி, சனி இம் மூன்று நாட்களிலும் நடைபெறும். தமிழ்த் தேர்வு, இளந் தமிழ்ப் புலவர், தமிழ்ப் புலவர் இம் மூவகைத் தேர்வுகட் கும் விண்ணப்பிக்க விரும்பும் அறிஞர்கள் யாவரும் அவ்வத்தேர்வு கட்குரிய கட்டணத் தொகையுடன் விண்ணப்பங்களை 1934ஆடு எப்ரல்மீ 30உ (சித்திரைமீ ௰௫)க்குள் சங்கம் அமைச்சர் பெய ருக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஐந்து பேர்கட்கு அதிகப் பட்ட விண்ணப்பங்கள் உள்ள இடங்களும் தேர்வு நடைபெறும் இடமாகக் குறிக்கப்பட எற்பாடு செய்யலாம்.

அன்புள்ள

திருநெல்வேலி 21-3-1934 } பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.



காஞ்சீபுரம் நாயனுப்பிள்ளை
(சுப்பிரமணிய பிள்ளை)

பிறப்பு:—சர்வசித்துஸ்ரீ ஆடிமீ 11உ (July 1887)

இறப்பு:—பவஸ்ரீ சித்திரைமீ 21உ (3rd May 1934)